KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி

| | |
|---|---|
| வருட சந்தா தபால் செலவு உள்பட | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ரூ 1-12 |
| வெளிநாட்டுக்கு | ரூ 4—0 |

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ ..
தொடுத்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்

மலர் 4 | ஈரோடு சுக்கில வருடம் சித்திரை மீ 9உ (21—4—29) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 52.

வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

## "பகுத்தறிவு."

சுக்கில வருஷம் சித்திரை மாதம் முதல்கொண்டு "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குப் பகுத்தறிவை வளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விட மனிதனுக்குப் பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும். அதை அனுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும். அன்றியும் தமிழ் நாட்டிலுள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள்.

விலாசம்:—
"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மனைவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.



புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

Mysteries of Wedded Life.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தகசாலை,
244, தாங்கசாலைவீதி, சென்னை.

(4-a)

தங்க மெடல்கள் பெற்ற

மலையாள நாட்டுத் துணிகள்.

இரணியல் நேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் சேவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
Travancore.

மகா மன்மத சிந்தாமணி லேகியம்.


அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சகாயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0, டை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, தைரு பஜார், மதராஸ்.

முந்துங்கள்.

விலை ரூ. 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டைசாட்டுபொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான் ஸ்பர்படங்கள் 32; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி
(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.

# இனம்! சுவிஸ் வைரம் இனம்!!

## SWISS BRILLIANTS.

ஜெர்மன் வைரம் என்றும் அமரிக்கன் நீவ்டயமன் என்றும் கூறப்படும் வைரங்களை விட சுவிஸ் வைரம் சிரேஷ்டமானதென்று நிபுணர்களால் ரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. சுவிஸ் வைரமானது ஒரு சம்மட்டியின் பலமான அடியாலும் உடைக்க முடியாதபடி அவ்வளவு கெட்டியானது. அது மிகவும் கெட்டியாக விருப்பதால் அதனுடைய ஜ்வலிப்பும், பிரகாசமும், மிகநேர்த்தியான மெருகும் 100 வருடங்கள் ஆனாலும் கூட மறைந்து போகாது. சுவிஸ் வைரமானது எவ்வளவு நேரம் நெருப்பில் போடப்படினும் வருடக்கணக்காக எண்ணெயில் போட்டு வைத்தாலும் அதன் நிறம் மாறாது. அரத்துக்கு தேய்வு போகாது.

எங்களிடம் எல்லா சயிஸ் (அளவு) கல்களும் இருக்கிறது. காரட் விலை 2½ வெள்ளி முதல் 5 வெள்ளி வரையில் ஒரு (1) சயிஸ் முதல் 50 சயிஸ் வரையில் வரி வடிவம் (படம்) எழுதப்பட்டதும் இன்னும் பல மாதிரி மாணிக்க கல்வெட்டுகளும் அளவும் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் இனம்.

ஒரு சாம்பிள் சுவிஸ் வைரம் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி இனமாக பெற்றுக் கொள்ளலாம். இந்தியா, பர்மா, சிலோன் பகுதிகளிலிருந்து அனுப்பும் கடிதங்களுக்கு 2 அணா அல்லது 9 சதம் ஸ்டாம்பும் போஸ்டு கார்டாயிருந்தால் 1 அணா அல்லது 6 சதம் ஸ்டாம்பும் ஒட்டவேண்டும்.


**எங்ளோ சுவிஸ் மாணிக்க கம்பெனி,**
தபால் பெட்டி நெ. 360, பினங்கு.

The Anglo Swiss Gem Company,
P. O. Box 360, PENANG.

(11)



எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை,
ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள். (4-h)



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உரதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



Souriya

சகோதரிகளே!

எனக்கு 39 வருடங்கள் வரையில் புத்ரபாக்கியமில்லாமல் சதா அவஸ்தைப்பட்டு வந்த சூதக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்ர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

சுந்தராம்பாள்.

# "சௌரியா"

ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான

## 'சௌரியாவை!'

சாப்பிட்டு ருது சூலை, சூதக வலி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதியினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சம்பன்னராய் வாழ்கின்றனர்.

விபரமான கேட்லாக் இனம்.

புட்டி 1 க்கு ரூபாய் 3--0—0.

பாக்கிங் தபால் செலவு வேறு

**சங்கர ராம் மெடிகல் ஹால்,**
சேலம்.

(15)


## சாதிப்பட்டத்தையும் சமயக்குறிகளையும் துறந்தவர்கள்.

திருவாளர்கள்:—

ஏ. எஸ். ஆனந்தம்
தெற்குவாசல் மதுரை.

எஸ். நாட்டுராயன் (பிள்ளை)
கோயமுத்தூர்.

வி. சந்தனமுத்து (தாஸ்)
நுவரெலியா

ஏ. என். வெங்கடசாமி
கீழமார்க்கட் வீதி மதுரை.

எஸ். பகவதி
கும்பெனித்தெரு கொழும்பு.

சி. எம். குமார்
தூத்துக்குடி.

என். உலகநாதம்
தேமநன்குளம்.

ஏ. சி. எஸ். சைலம்
ஆழ்வார்குறிச்சி.

சு. ச. சுந்தரன்
திருவனந்தபுரம்.

எஸ். பண்டாரச் சிவன்
ஒருமன்குளம்

என். கண்ணன்
தலைச்சேரி.

கே. விஸ்வநாதன்
தூத்துக்குடி.

சி. பி. மணி
ஸ்டேஷன் மாஸ்டர்
சங்கா ஸ்டேஷன்

பா. மாசிலாமணி
கிழக்குத் தெரு ராமேஸ்வரம்.

## பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்தவர்கள்.

திருவாளர்கள்:—

மருதமுத்து S/o ஆறுமுகம்
பத்தாம்பர் சந்தை.

சேது முதலியார்
மேலக்கரந்தை
கோவில்பட்டி தாலூகா.

ஆ. கா. முருகையா பிள்ளை
பாப்பாகோவில்
நாகபட்டணம்

கி. ஆ. பெ. விசுவநாதம்
புகையிலைமண்டி, திருச்சி.

வி. சண்முக முதலியார்
வாணியம்பாடி

கரு. பெரி, பெரியையா
சிங்கம்புணரி

எம். நல்லகண்ணு பண்டிதர்
வியாசராசபுரம் களாக்காடு.

தி. மு. இராமசாமி நாயுடு
முனிசிபல் கண்ட்ராக்டர்
மதுரை.

மு. ரா. சபாபதிபிள்ளை
வளவனூர் விழுப்புரம் தாலூகா

பெ. ராமநாடார்
மு. சூரக்குடி
இராமநாதபுரம் ஜில்லா

# நியாயத்தைசமூகம் கவனித்துப்பார்க்கட்டும்.

(கைவல்லியம் எழுதுவது.)

தனக்குத்தானே பிரமாணமாயுள்ள கடவுள் அடிமுடியற்று அனுதியாய் இருப்பதுபோலவே அவருடைய சிருஷ்டியும் அநாதி நித்தியமாய் விளங்குகிறது. அப்படியே ஞானமும் அனுதி நித்தியமாக விருக்கிறது. அந்த பிர்மா ஞானத்தைத்தான் வேதமென்று சொல்லுவது. அந்த வேதமானது கர்மகாண்டம ஞானகாண்டம் என இருபிரிவை யுடையது. கர்மகாண்டம் பலவகையான யாகங்களைப்பற்றிக் கூறும். அவற்றின் பெரும்பான்மை இக்காலத்தில் அனுஷ்டிக்கப்படாமல் தொடாமைபார்க்காமை என்னும் இவைபோன்றவைகளே முன்னுல் நிற்கின்றன. வேதாந்தமென்றும், வேதசாரமென்றும், வேத முடிவென்றும் புகழ்ந்தோதப்பட்ட ஞானபாகமாகிய உத்தாபாகத்தில்தான் மதத்தின் அத்தியாத்ம தத்துவங்கள் அடங்கி யிருக்கின்றன. இந்த ஞானத்திரட்டு ரிஷிகளென்ற சில புருடர்களால் காணப்பெற்றஉண்மைகளாம். இந்த ஆத்மவிளக்கை ஒளித்து ஸ்மிருதி புராணங்களையும் புறக்கிரியைகளையும் கற்பித்து அதை பிரதானமாகக்காட்ட முனிவர் மன்னவர் மகாபுருஷருடைய சரித்திர வாயிலென்றும், அவர்களுடைய வம்சங்களில் கடவுளால் நிகழ்த்தப்பட்ட முக்கிய சம்பவங்களென்றும், மகான்கள் தங்களுக்குப்பட்ட உண்மைகளை எல்லாமெடுத்து நித்தியமான பரத்துவ ரகசியங்களை விளக்கியிருப்ப தாகவும், அவை பண்டிதர்களுக்கன்றிப் பாமரர்க்கெனவே ஏற்படுத்தப்பட்டனவென்றும், பாமரர்களுக்கு உயர்ந்த தத்துவ சாஸ்திரம் விளங்காதென்று சொல்லியும் சனசமூகங்களை அடிமைப்படுத்தி உயர்குடிப் பிறப்பென்பவர்களும், செல்வச் செருக்குமுள்ள நம் முன்னேர்களும் நம் நாட்டின் ஏழை மக்களை காலால் மிதித்து வருத்தினுர்கள்.

இந்தக்கொடுமைக்கு வெகுநாளாக உட்பட்டு, ஆதரவறறு, வலியற்று, ஒளிமழுங்கித்தாம் மானிடஜென்மமென்பதைக்கூட நமது சமூகத்தில் முக்கால்பாகம் மறந்தே போய்விட்டது. மிஞ்சியிருக்கும் மற்றபாகத்தில் ஒரு பகுதியார் தங்களைக் கடவுள் மற்றவர்களைப்போல சிருஷ்டிக்காமல் தனியாகச் சிருஷ்டித்து இவ்வுலகத்தில் பெற்றிருக்கும் உயர்ந்த சிறப்பைப்போல் கடவுள் உலகத்திலும் கூட தாங்கள் பார்ப்பார ஜாதியென்று நினைத்துக்கொண்டார்கள். மற்றெரு பகுதியார் மனித சக்திகளையெல்லாம் மறந்து தப்பித்தவறி நினைவிற்குவரும் சிறிது மனிதசக்திகளைக்கூட கடவுளிடமும் சமயச் சந்தையிலும் விற்றுவிட்டார்கள்.

இப்படியிருக்க யாராவது அவர்களைப்பற்றி ஒரு நல்லவார்த்தை சொல்லுகிறவர்களை நாஸ்திகர்களென்று தூற்றி கருவறுக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளப் போகின்றுர்களாம். நமது கல்வியிலும் தற்கால கல்வியிலும் எவ்வளவோ தேர்ந்தவர்களென்று பெருமையடித்துக்கொண்டபோதிலும் இந்தத் தேசத்தில் காலாலடிபட்டு வருந்தும் ஏழைகளைத் கைகொடுத்துத் தூக்கிவிடாமல் இந்த ஏழைகளை இன்னும் மிருகப்பிராயராக்கி அவர்களை முன்னிலும் அதிகமாய் வருத்துவதற்காகவேண்டி காவியமென்றும் கலையென்றும் சாஸ்திர யுக்திபோலிகளைக்கொண்டு சிறிதேனும் ஈவுஇரக்கம்தயைதாட்சணியமற்றநெஞ்சைத்திறந்து அதற்குள் அகச்சான்று இல்லை என்கிருர்கள். அகச்சான்றை எடுத்துக்காட்டினுல் சமயஒழுக்கம்இடங்கொடுக்கவில்லையென்கிருர்கள். உங்கள் சமயம்உங்களுக்கு விதித்தஒழுக்கங்கள்போல்நீங்களிருக்கிர்களாவென்றுல் சமயத்தை யழிக்கவந்தவன் கல்வியறிவில்லாதவன் என்கிருர்கள். அறிவு எல்லாருக்கும் பொதுவென்பதை பத்திரிகைப்பண்டிதர்கள் ஒத்துக்கொள்ளா விட்டாலும் நமதுபண்டிதர்களின் மேற்கோள்களுக்கு முன்னுல்வந்து நிற்கும் இங்கிலீஷ் பண்டிதர்களாலும் இங்கிலீஷ் ராஜாங்கத்தாலும் முழு உலகத்தாலும் அறிவு எல்லாருக்கும் பொதுவென்பதாக ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதே இதையெல்லாம்விட நீங்கள் படித்த கல்விதானென்ன? நாங்கள் சொல்லுவது உங்கள் கல்விக்கணக்குக்கு ஒத்துவராவிட்டாலும் சமயத்திலோ சமய ஏட்டிலோ அதைச்சொன்ன பெரியவர்கள் வாக்கிலோ இல்லையா? என்றுகேட்டால் ஆராய்ச்சியில்லாதவர்கள் என்கிருர்கள். சமயத்தைப்பற்றி இதிகாச புராணங்களில் படித்திருக்கிறேம், அதில் சிவனும் விஷ்ணுவுமே பெரிய முக்கிய தெய்வங்கள்; இவர்களில் சிவன் சிறியவர்என்று ஒருபுராணத்தில் தூஷித்துவிஷ்ணுவை உயர்த்தியும், மற்றெருபுராணத்தில் விஷ்ணுவை நிந்தித்து சிவனை உயர்த்தியும் அந்தச்சண்டையால் பின்னும்பல புஸ்தகங்களைஎழுதி இழித்தும்பழித்தும், எல்லாக் கடவுளையும் கேவலமாக எழுதி பார்ப்பான் வயிறு பிழைக்கவே அதில் நிறைத்துவிட்டான். மேலும் ஒரு ஜாதியான் தவம்செய்தால் மற்றெரு ஜாதியான் சாவதும், கடவுள் அவதாரமான சக்கரவர்த்தி திருமகனுர் தவம்செய்தவனை வெட்டியதும் செத்தவன் பிழைத்ததும் அந்த விசேடத்தைத் தெய்வலோக நாரதர்வந்து ஆமோதித்ததும் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்ததும் சமயத்தை நிலைநிறுத்தின ராஜநீதியைக்கொண்டு பிராமணர்கள் ஆமோதித்து ஆசீர்வதித்ததும் போன்றமகத்துவங்களெல்லாம் உங்கள் ஆராய்ச்சியில் தென்படவில்லையோவென்றுல் இதிகாசங்களைக் குற்றம்சொல்லும் நாஸ்திகர்கள் என்கிருர்கள். ஸ்மிருதியை ஒத்துக்கொள்ளாமல் யாகம் வேள்வி முதலியவைகளை நிந்திப்பவன் நாஸ்திகன்; சைவரும் வைஷ்ணவருமான உங்களுக்கு ஸ்மிருதி முழுப்பிரமாணமல்லவெ, யாகம், பலி, மது, மாம்சம் உங்களுக்கு ஒத்துவராதே, யாகம், பலி முதலியவைகளைக் குற்றம் சொன்னவர்களை நாஸ்திகர்களென்று சொல்லுவதை நீங்கள் மறந்துவிட்டீர்களா? நாஸ்திகர்களான நீங்கள் எங்களை எந்த நாஸ்திகர்கள் என்கிறீர்கள்? அந்தத்தருமசாஸ்திரம் உங்களையும் சூத்திரர்கள் என்றுதானே சொல்லுகிறது.

வேதநூல் ஓதியுணர்ந்து புகழ்பெற்ற இல்லறத்தானுகிய பிராமணனுக்கு ஊழியம் செய்வதே சூத்திரனுக்கு வீடுபேற்றை அடைவிக்கும் மேலான அறமாகுமென்றும் பிராமணனுக்குப் பணிவிடை செய்துகொண்டு செருக்கில்லாமல் நாடோறும் அவர்களை அடுத்திருக்கிற சூத்திரன் நற்கதி அடைவான் என்றுமல்லவா? தரும சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படி அல்லாத நீங்களெல்லாம் நகரத்திற்குதானே போகவேண்டும். திரு. கலியாணசுந்தர முதலியார் பத்திரிகை ஆசிரியாராக விருப்பதும், முத்தாய்க முதலியார் சட்டசபையிலிருப்பதும் திரு. நெல்லையப்ப பிள்ளை தாசில்தாரராகி பென்ஷன் வாங்குவதும் திரு. சச்சிதானந்தம்பிள்ளை பி. எ, எல். டி. படித்து வாத்தியாருக்கு வாத்தியாராக விருப்பதும் தரும சாஸ்திரத்திற்கு விரோதமல்லவா? தரும சாஸ்திரங்களுக்கு விரோதமானவர்களும் நாஸ்திகர்கள் தானே, நீங்கள் சொல்லுவதுபோல சுயமயாதைக்காரர்களும் நாஸ்திகர்கள் ஆனுல் நீங்களும் அவர்களும் தானே நரகத்தில் சந்தித்து ஒன்றுபடவேண்டும். பார்ப்பாரக்கோ நரகமில்லை, சாஸ்திரம் அவர்களுடையது. சமயம் அவர்களுடையது, சுவாமியோ அவர்கள் ஜாதி இதற்கு.

"அங்கமோராறும் அருமறை நான்கும்
அருள்செய்து, பொங்குவெண்ணூலும்
பொடியணி மார்பிற் பொலிவித்து"

என்னும் ஸ்ரீ திருஞான சம்பந்தரின் அருள்வாக்கே உங்களுக்குப் பிரமாணமாக இருக்கிறது. சிவபெருமான் பூணூல் அணிந்த பார்ப்பார ஜாதியாக விருப்பதாக திருஞான சம்பந்தர் சொல்லியிருக்கையில் அவர்கள் நரகத்திற்கு எப்படிப் போவார்கள்? ராஜாக்களுடைய முதற்பிள்ளைக்கு ராஜ்ஜியம் பட்டாபிஷேகம் எப்படிச்சொந்தமோ அதுபோல கடவுளின் முகத்திலிருந்து பிறந்த முதற் பிள்ளைகளான அவர்களுக்கு கடவுளுடைய காயத்திரி மந்திரம் சொந்தம், சாஸ்திர சம்பிரதாயங்களையும், சமய ஒழுக்கங்களையும் அவர்கள் தாண்டி எக்காரியங்களைச் செய்தாலும் காயத்திரி மந்திரம் சொன்னுல் எந்தப்பாவமும் போய் சொர்க்கம் வந்துவிடும். உங்களுக்கும் எங்களுக்குமென்னமந்திர மிருக்கிறது? உங்களுக்குப் பஞ்சாட்சரமிருப்பதாகச் சொல்லுவீர்கள். பார்ப்பாரதெய்வம் பராசரஸ்மிருதியை ஒத்துக்கொள்ளுமே யல்லாமல் பஞ்சாட்சரத்தை ஒத்துக் கொள்ளாதே. பார்ப்பாரதெய்வத்தின் பக்தர்கள் அப்பர்சுவாமிகளை இன்னும் ஒத்துக்கொள்ளாத ரகசியம் சிவன் கோவிலுக்குப்போகும் சிவபக்தர்களுக்குத் தெரிந்ததுதானே. அவர்களை விடவா நீங்கள் பஞ்சாட்சரம் ஜெபிக்கமுடியும்? தாரக மந்திரத்தைச் சொன்னீர்களானுல் விஷ்ணுவே உங்கள் தலையை வெட்டிவிடுவார்? ஏனெனில் நீங்கள் சூத்திரர்கள்.

"புராணங்கள் பலவற்றிலும் ஆகமங்களிலும் பிற நூல்களிலும் ஆரியப் பார்ப்பனரும் அவர் வழிச்சார்ந்த தமிழ் அந்தணரும் தமிழர்களைச் சூத்திரரென வழங்குவதற்கு வேண்டிய நிலையான ஏற்பாடுகளையெல்லாம் செய்து அவற்றின்கட் செருகிவிட்டனர். தமிழரில் கற்றவர் எவரேனும் இப்புரட்டுகளைத் தெரிந்துகொண்டு, வேளாளரின் பண்டை வழக்க வொழுக்கங்களெல்லாம் மிகச்சிறந்தனவாயிருத்தலின் இவர்களைப் பழைய நூல்களெல்லாம் விசேடப்படுத்தி கூறியிருக்க நீவிர் மட்டும் இவர்களைச் சூத்திரர் என இழித்துக்கூறுதல் என்னை? என்று அவ்வாரியப் பார்ப்பனரையும் அவர் வழிச் சார்ந்தாரையும் வினவினுல் அப்போது அவர்கள் மிகவும் ஆழ்ந்த சூழ்ச்சியுடையராய் சூத்திரரென்னும் பெயரை எடுத்துவிடாமலும் அச் சூத்திரப் பெயர்கொண்டே அவரை அங்கோரத்தில் மகிழ்வித்தல் வேண்டியும் நீங்கள்சற்சூத்திரர் ஏனையோரெல்லாம் அசற் சூத்திரர் எனக்கூறியும் அதனை நூலில் எழுதியும் அவரை ஏமாற்றி வந்தனர். அவ்வேமாற்றுக்களைத்தெரிந்துகொள்ளும் ஆராய்ச்சியுணர்வில்லாதவர்களும் வடமொழியில் எவர் எவைகளை எழுதி வைத்தாலும்அவை தம்மை எல்லாம் ஆராய்ந்து பாராமற் கடவுள் அருளிச் செய்தனவாகவே நம்பிவிடுவாருமான தமிழ்நற்றூர் சிலர் தாம் வேளாளராயிருந்தும் தம்மை சற் சூத்திரர் எனச் சொல்லிப் பெருமை பாராட்டுகின்றனர். சூத்திரன் என்னும் சொல்லுக்குப் பொருள் மடமையுடையோன், பிறருக்கு ஏவல் செய்வோன் என்பனவாதல் அமரகண்டினுல் நன்கு விளங்குதலால் தம்மை நல்ல மடையர். நல்ல வேலைக்காரர் என்று கூறி மகிழ்வாரையே ஒத்திருக்கின்றனர்" என்று வேளாளர் யார் என்னும்நூலில் திரு. மறைமலையடிகள் என்னும், வேதாசலம் அவர்கள் எழுதியதைப் படித்திருப்பீர்களானதினுல் சற் சூத்திரர்களென்று தப்பிக்கவுமா காது. இவ்விதமாகஇழிவுப்பெயரைத் தமிழர்களுக்கிட்டு ஜாதிப்பகையை மூட்டிச் சமயத்தைத்திரித்து பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்புக்கேற்பட்டசாஸ்திரங்களையேபரப்பி உண்மைக் கட்டியே

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

### (16-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது)

பரதன் போனபின்பு சித்திர கூடத்திலிருந்த முனிவர்கள் வேறிடத்திற்குப் போக வேண்டுமென்று ஆவல் கொண்டிருப்பதையும் எதையோ கண்டு பயப்படுவதையும் அவர்களுடைய சொற்களாலும் குறிகளாலும் இராமன் அறிந்தனன். அவர்கள் சங்கைப்பட்டு இராமனைக் கண்ணாலும் புருவத்தாலும் சாடையால் சுட்டிக்காட்டி ஒருவருக்கொருவர் மெதுவாக கசுகுசு வென்று சொல்லி அவனைக்குறித்து இரகசியமாக என்னென்னவோ கதைகளைப் பேசிக்கொண்டிருந்தனர். இராமன் தன்னிடத்தில் அவர்கள் ஏதோ சந்தேகப்படுவதாக அறிந்து முனிவர் தலைவனைக் கண்டு காரணம் வினவினான். அதற்கு அம்முனித் தலைவன் "இங்கிருக்கும் முனிவர்களுக்கு உங்களுடைய நிமித்தமாக அரக்கர்களால் துன்பங்கள் விளைகின்றன. அவைகளுக்கு அஞ்சி முனிவர்கள் ஒருவருக்கொருவர் தனித்து ஏதோ கதைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கருகிலுள்ள ஜனஸ்தானத்தில் (மக்களிடம்) இராவணனுடைய தம்பியாகிய கரன் வாழ்கிறான். அவன் அங்கிருக்கும் முனிவர்களை யெல்லாம் துரத்துகிறான். உன்னிடத்திலும் அவனுக்கு வெறுப்புண்டாயிருக்கிறது. நீ இந்த இடத்துக்கு வந்தது முதல் அரக்கர் எங்களைத் துன்புறுத்துகின்றனர். நீ இங்கிருக்கும் வரையும் அவர்கள் எங்களைத் துன்புறுத்திக் கொண்டேயிருப்பார்கள். அதனால்இந்த முனிவர்கள் வேறிடம் போகத்துணிந்திருக்கிறார்கள். நாங்கள் முன் வாழ்ந்த ஓரிடத்திற்குப் போகிறோம். கரன் மிகுந்த வலிமையுடையவனாதால் உன்னையும் துன்புறுத்துவான். வேண்டுமானால் நீயும் வரலாம். நீ வல்லவனானாலும் நீ உன்னுடைய மனைவியுடன் இங்கே வந்திருப்பதால் எப்பொழுதும் உனக்குத் துன்பம் விளையும். ஆகையால் நீ இங்கே வாழ்வது துன்பத்துக்கே இடமாம்" என்றனன். இராமனால் அம்முனிவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் போய்விட்டார்கள்.

இராமன் "இவ்விடம் ஊரைப் பற்றிய நினைவை அடிக்கடி உண்டாக்குகிறது. மேலும் சேனைகளால் அசுத்த மடைந்துளது" என்று சிந்தித்து பல காரணங்களால் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அத்திரி முனிவன் குடிசையை அடைந்தான். அம்முனிவன் தன் மனைவி அனசூயையைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசி சீதையை அவளைப் பணியுமாறு தூண்டினான். சீதை அனசூயையை வணங்கினாள். அனசூயை சீதைக்குக் கலவைச் சாந்து, அணிகலன்கள், பட்டாடைகள் தந்து இராமனை மணந்த வரலாற்றை வினவினாள். சீதை "அம்மே! கலப்பையால் நிலத்தை உழுது கொண்டிருந்த சனகமன்னர்முன் நிலத்தில் தோன்றினேன். அவர் உடம்பு முழுவதும் புழுதி படிந்துள்ள என்னைப் பார்த்து எடுத்து வளர்த்தார். மணப்பருவம் எனக்கு வந்ததைப்பார்த்து வறியவன் பணமில்லாமையாற் சிந்தனையடைவது போல் சிந்தனையடைந்தார். பெண்ணின் தந்தை பெண்ணை மணம் செய்து கொடாமலிருந்தால் அவமானமடைவான். மன்னவர் அம்மாதிரியான அவமானம் தமக்கும் சமீபத்திலிருப்பதாக ஆலோசித்து கவலைக்கடலில் மூழ்கியவராய் புணையில்லாதவன் போல் கரையை அடையவில்லை. அவர் என்னை உலக வழக்கப்படி பிறவாதவளாக அறிந்து ஒத்த குலத்தையும் குணத்தையும் உடையவனும் எனக்குத் தக்கவனுமான கணவனை ஆலோசித்து எவ்வளவுசிரமப்பட்டுத்தேடியும் கிடைக்கவில்லை. அதனால் வில்லை வளைப்பவனுக்கே என்னைக் கொடுப்பதாக ஏற்பாடு செய்தனர். ஒருவராலும் அது முடியவில்லை. நெடுங்காலம் சென்றபின் இராமர் வந்து வளைத்தார். ஆனால் என் தந்தை தாரை வார்க்கப் போனபோது இராமர் மறுத்து தமது தந்தையின் கருத்தையறியாமல் என்னை ஏற்க முடியாதென்றார். எனது தந்தை தசரதரை வரவழைத்து அவர் சம்மதி பெற்று என்னை இராமருக்கு மணமுடித்தார்" என்று விவரித்துரைத்தாள். பின் சீதை விடை பெற்று இராமனிடம் வந்தாள். அவள் பெற்ற பரிசுகளைக் கண்டு இராமன் மகிழ்ந்தான். மறுநாட்காலையில் இராமன் அம்முனிவர்களிடம் விடைபெற்றுத் தண்டகாரணியத்தில் நுழைந்தான். முனிவர்கள் அரக்கரின் துன்பத்தைச் சொல்லி வழியனுப்பினர். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் சித்திரகூடத்தை விட்டுப் புறப்படு முன்னரே அங்கிருந்த முனிவர்கள் அவனை விட்டுப் பிரிந்து வேற்றிடம் சென்று விட்டனர். இராமன் சித்திரகூடம் வந்த நாள் தொடங்கி அரக்கர்கள் அங்கிருந்த முனிவர்களைத் துன்புறுத்தி வந்தனரெனவும் அதற்குக் காரணம் இராமன் வந்ததே என்றும், இராமனிடத்தில் அரக்கர் தலைவனும் கரனுக்கு வெறுப்பென்றும், இராமன் அங்கிருக்கும் வரையும் அவர்களை அரக்கர் துன்புறுத்திக் கொண்டேயிருப்பார்களென்றும், அதனால் அம்முனிவர் வேற்றிடம் போக நேர்ந்ததென்றும் இராமன் அவனுடைய மனைவியுடன் வந்திருப்பதால் எப்பொழுதும் அவனுக்குத்துன்பம் விளையுமென்றும் முனிவர் தலைவன் இராமனிடம் நேரிலே கூறியதைக் கவனிக்குமாறு அன்பர்களை வேண்டுகின்றோம். இதனால் இவ்வாறு அரக்கரால் விளைந்த துன்பமனைத்தும் இராமனையும் சீதையையும் குறித்ததே எனவும் அரக்கர் அவர்கள் பொருட்டாகவே முனிவர்களைத் துன்புறுத்தினரெனவும்அறியலாம். இதன் காரணத்தைச் சிறுவரும் உணராதிரார். முனிவர்கள் இராமனிடம் சங்கைப்பட்டு அவனைக் கண்ணாலும் புருவத்தாலும் சாடையால் சுட்டிக்காட்டி ஒருவருக் கொருவர் மெதுவாக கசு குசு வென்று சொல்லி அவனைக் குறித்து இரகசியமாக என்னென்னவோ கதைகளைப் பேசிக்கொண்டிருந்தனர் என்னும் செய்தியைக் கவனிக்குமிடத்து அக்கதைகள் யாவையாயிருக்கலாமென்ற சிந்தனை உண்டாகிறது. அவை எத்தன்மையனவாயிருந்தாலும் அவர்கள் அவற்றைப்பிறரறியாது பேசினபடியால் இராமனையும் சீதையையும் இலக்குவனையும் பற்றிய கேவலமான வெறுக்கத்தகுந்த கதைகளாகவே இருத்தல் வேண்டும். இல்லையானால் அவைகளை அவர்கள் இராமன் முதலியோர் அறியாது பேசக் காரணமில்லை. அச்செயல்கள் கரன் முதலியோருக்கு மனத்தில் வெறுப்பை விளைத்திருத்தல் கூடும். அதனாலேயே அவர்கள் முனிவர்களை வந்து துன்புறுத்தியிருக்கின்றனர். அவ்விடமெல்லாம் கரனுக்குச் சொந்தமாயிருக்க வேண்டும். அவ்விடத்தில் இராமனும் சீதையும் இலக்குவனும் பன்றி முதலிய மிருகங்களைக்கொன்று தின்றதோடு நில்லாமல் காடுகளிலும் ஆற்றிலும் அவர்கள் காட்டுமிருகங்களைப் போல காமுற்றுத் திரிந்தனரென நாம் முன்பு ஆராய்ந்துளோம். அறிஞர் வெறுக்கத்தகுந்த இத்தீய செயல்களை தமிழ் மன்னனும் கரன் முதலியோர் கண்டே மட்டிலடங்காத வெறுப்பைக் கொண்டு துன்புறுத்தத்தொடங்கினர் போலும்! இச்செய்திகளைப் பேரறிவாளர்சிந்தித்துத் தெளியவேண்டுகிறோம்.

இராமனால் அம்முனிவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்களுக்கு அவனிடத்தில் நம்பிக்கையில்லாது போனபின்பு அதிலும் அவனாலேயே தங்களுக்குப்பல தாங்க முடியாத துன்பங்கள் விளைகின்றன என்ற உணர்ச்சி மீதூர்ந்தெழுந்த பின்பு அவர்களைத் தடுத்துரைக்க யாவரே வல்லர்? அதனால் சில நாளில் இராமனும் பல காரணங்களை முன்னிட்டு அவ்விடத்தின் நீங்கித் தெற்கே போகிறான். போனவன் அத்திரி முனிவனைக் காண்கிறான். அம்முனிவன் தனது மனைவி அனசூயையே வானளாவப் புகழ்கிறான்.

அனசூயையினுடைய வேண்டுதலின்படி சீதை தனது முன் வரலாறு கூறுகிறாள். இவ்வரலாற்றினால் அவள் சனகன்முன் புழுதிபடிந்து கிடந்தனளென அறியலாம். நம் முன்னோர் கணவனையிழந்த விதவையோ அல்லது மணமாகாத கன்னியோ பெற்ற பிள்ளையே இவ்வாறு கதியற்றுப் புழுதி படிந்து கிடந்தது என்ற செய்தி இதனால் வலியுறுகின்றது. மேலும் அவளை வளர்த்த சனகன் அவள் மணப்பருவம் அடைந்த போது மிகவும் கவலையடைகிறான். சீதை மற்றைப் பெண்களைப் போலப் பிறந்தவள் இல்லையாதலால் அவளை மணக்க முன் வருவார் இலராகின்றனர். சனகன் மிகவும் முயன்றும் கிடைக்கவில்லை.கடைசியாக வில்லை வளைத்தோர்க்கு அவளை மணம் செய்விப்பதென அவன் முடிவு கட்டியும் நெடுங்காலம் வரை அவளை மணக்கமணாளன் வரவில்லை. அப்போது தான் இராமன் வருகிறான். இராமன் அப்போது பதினிரட்டைப் பிராயத்தான். சீதையோ மணப் பருவமடைந்து நெடுங்காலம் மணமில்லாம லிருந்தவளாதலால் அவளுக்குக் குறைந்தது வயது முப்பதுக்கு மேலே தான். இது நாம் முன்னர் பாலகாண்டத்தில் நன்றாக ஆராய்ந்து நிலைநாட்டிய செய்தியே. வயதுக்கு மிக இளையவனாகிய இராமன் கூட சீதையை மணப்பதற்கு முன் தன் தந்தையின் சம்மதம் பெறத்துணிந்து நிற்கிறான். இதுவும் அவள் பேரூர் குலம் தெரியாதநிலைமையிலிருந்தமையினாற்றான் போலும்! நிற்க, கம்பரது புரளியை ஆராய்வோம்.

பொய்யர் தலைவராகும் கம்பர் பரதன் போனபின் சித்திரகூடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவாரோ? அவருக்கு இராமனைத் தெய்வமெனக் காட்டி உலகை ஏமாற்றவேண்டுமே. அதற்காக அவர் இராமனைப்பற்றிய பழிப்புக்கிடமான வரலாறுகளாகிய முனிவர் இராமனைப்பற்றிக் கூடிக்கூடிப் பேசிப் பிரிந்தது முதலிய செய்திகளையெல்லாம் மறைத்தார். முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தது போலும் இது. இராமன் சித்திரகூடத்தை விட்டுப்புறப்பட்ட காரணங்கள் வேறாக இருக்க, கம்பர் தனது தம்பி முதலியோர் அடிக்கடி வருவார்கள் என்ற எண்ணத்தால் இராமன் அதை விட்டுப் போனான் எனப்புதுக்கதை எழுதுகிறார்.

வால்மீகி முனிவருடைய கதைப்போக்கை விடுத்து கம்பர் தமது இராமாயணத்தில் சித்திரகூடத்தை விட்டுப்புறப்பட்டான் இராமன் என்ற அளவில் அயோத்தியா கண்டத்தை நிறுத்திக் கொண்டு, அவன் அத்திரி முனிவனைக்கண்ட வரலாற்றை ஆரணிய காண்டத்தில் பாடுகிறார். வால்மீகியோ அத்திரியைக்கண்டு விடைபெற்று இராமன் ஆரணியத்தில் புகுந்தான் என்பதோடு அயோத்தியா காண்டத்தில் கூறி, ஆரணியம் புகுந்த உடன் நிகழ்ச்சிகளை ஆரணிய காண்டத்தில் கூறுகிறார். ஆதலின் வால்மீகியதே பொருத்தமான வரலாறாம். சீதை அனசூயையிடம் கூறிய முன்னைய மண வரலாறுகளைக் கம்பர் கூறாது விடுத்தார். அது சீதையின் தெய்வத் தன்மையை நிலைநாட்டக் கேடாமாதலின் உண்மை மறைப்பதே இவர் இயல்புபோலும்!

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# சுயமரியாதை எதிரிகளுக்குச் சவுக்கடி.

## விருதுநகரில் திரு. ஷண்முகம் அவர்கள் பேருரை.

"எந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ், சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாகத் தோன்றுகின்றதோ அந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரசைவிட்டு விலகிவிடுவேன்."

8-4-29-ல் மாலை 7 மணிக்கு விருதுநகர் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் காஸ்பாபாலிட்டன் கிளப் பந்தடி மேடையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை முனிசிபல் சேர்மென் திருவாளர் ஆர். எஸ். நாயுடு அக்கிராசனம் வகித்தார். தலைவர் முகவுரைக்குப்பின் சங்கத்தின்சார்பாக திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ., அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பத்திரத்திற்குப் பதில் கூறுமுகத்து திருவாளர் ஷண்முகம் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசியதாவது:—

**திரு. ஆர். கே. ஷண்முகம் சொற்பொழிவு**

கனவான்களே! என்னைப் பலவாறு கௌரவித்து உங்கள் வரவேற்புப் பத்திரத்தில் கூறியிருக்கும் மொழிகளுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன். நானும் ஓர் வாலிபனாக இருக்கின்றபடியால் வாலிபர்களால் வாசித்துக் கொடுக்கப்படும் பத்திரங்களையே விசேஷமாகக் கொள்ளுகிறேன். வாலிபர்களால் ஒருவன் பாராட்டப்படுவானானால் உண்மையில் அவனிடம் ஓர் பெருமை இருக்கவேண்டும். ஏனெனில், வாலிபர்கள் கபடு, சூது இன்னோரன்ன தீக்குணங்கள் அறியாதவர்கள். அவர்கள் சூதுவாது அறியாமல் உண்மையாக உழைப்பவர்கள். சுயநலத்தைக் கருதாது வேலை செய்பவர்களும் அவர்களே, ஆகையினால்தான் வாலிபர் இயக்கம் உலகெங்கும் பரவிக்கொண்டே வருகிறது. இதற்கு சரித்திரத்திலும் பல ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக தாழ்த்தப்பட்ட அநேக தேசங்கள் வாலிபர் இயக்கத்தால் முன்னேற்றம் அடைந்து வருவதைக் கண்கூடாகக்காண்கிறோம். துருக்கி—சீனா போன்ற தேசங்கள் சென்ற 10, 15 ஆண்டுகளாக வாலிபர்களால் செய்யப்பட்டுவரும் கிளர்ச்சியின் காரணமாய் முன்னேறிக் கொண்டு வருகின்றன.

நம் நாட்டிலும் சென்ற 60 ஆண்டுகளாய் தேசிய இயக்கம் என்ற இயக்கங்கள் இருந்தும், சென்ற 6 ஆண்டுகளில்தான் நாட்டில் சிறிது உணர்ச்சி உண்டாய்க்கொண்டு வருகிறது. அதற்கும் காரணம் சமீப காலத்தில் ஏற்பட்ட வாலிபர்களின் கிளர்ச்சியே.

சிறக, நம் தமிழ்நாட்டில் சின்னாட்களுக்கு முன் தோன்றிய சமுதாய சீர்திருத்த இயக்கமான சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி நான் என்ன அபிப்பிராயம் கொண்டுளேன் என்பதை உங்களில் பலர் அறிய ஆவல் உள்ளவர்களாய் இருக்கலாம். சென்னையில் நடந்துவரும் ஒரு பத்திரிகையில் ஒருவர் இது விஷயமாக என்னைச் சில கேள்விகள் கேட்டிருந்ததாகவும் நான் என் நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டேன். அதில் நான் காங்கிரஸ் காரியதரிசியாக இருந்துகொண்டு சுயமரியாதை இயக்கத்தில் எப்படி ஓர் ஸ்தானம் வகித்துவரலாம் என்று கண்டிருந்ததாகவும் அறிந்தேன். இவ்வாறு பத்திரிகைகளில் வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதிக்கொண்டிருப்பது சாத்தியப்படாது. ஆயினும், எனக்குக் கேட்டு விடப்பட்டிருக்கும் கேள்விக்குப் பதில் ஒரு வார்த்தையில் கூறிவிடலாம். ஆகையால் அதை நான் இங்கு கூறிவிடுகிறேன். பதில் கூறுமுன் ஒன்று சொல்ல விரும்புகிறேன், அதாவது காங்கிரஸ் இயக்கத்தின் உண்மைக் கொள்கையைக் கடிதம் எழுதிய நண்பர் அறிந்திருப்பாரானால் அவ்விதம் கடிதம் எழுதியிருக்கவேமாட்டார். காங்கிரசின் உண்மைக் கொள்கைகளே சுயமரியாதை இயக்கமாகும். காங்கிரசின் ஆரம்ப உத்தமக் கொள்கைக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் சிறிதும் வித்தியாசமில்லை. வித்தியாசம் உண்டென்று சொல்லும் காங்கிரஸ் வாதிகளைப் போலிகள் என்றே கூறுவேன். (கரகோஷம்) எந்த நிமிஷத்தில் காங்கிரஸ் சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாகத் தோன்றுகிறதோ அந்த சந்தர்ப்பத்திலே நான் காங்கிரசை விட்டு விலகிவிடுவேன். (நீண்ட கரகோஷம்)

காங்கிரஸ் இயக்கம் ஆரம்பித்த காலத்தில் தேசிய சுயமரியாதைக்கும் சமுதாய சீர்திருத்தத்திற்கும் பாடுபடவேண்டும் என்ற கொள்கையுடனே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நமது துர் அதிர்ஷ்ட வசத்தால் பிந்திய கொள்கை கைவிடப்பட்டு வெறும் அரசியல் இயக்கமாக இலங்க ஆரம்பித்தது. சமுதாய விஷயம் கைவிடப்பட்டபடியால் தான் புதிதாக சுயமரியாதை இயக்கம் தோன்ற அவசியம்நேர்ந்தது. காங்கிரஸ் முன் மாதிரி இருந்தால் புதியதோர் இயக்கத்திற்கு அவசியமேயில்லை. காங்கிரஸ் சமுதாய விஷயத்தை மற்றிலும் புறக்கணித்துவிட்டது என்பதற்கு, நான் ஓர் உதாரணம் கூறுகிறேன். நான் சுமார் 3 வருஷங்களுக்குமுன் காங்கிரஸ் கொள்கையில் சிறிது திருத்தம் செய்யவேண்டும் என்று ஓர் தீர்மானம் அனுப்பினேன். அத்தீர்மானத்தில் காங்கிரஸ் இயக்கமானது தேசிய விடுதலைக்காகப் பாடுபடுவதுடன், சமுதாய ஒற்றுமைக்காகவும் சமுதாய சீர்திருத்தத்திற்காகவும் பாடுபடவேண்டும் என்று கண்டிருந்தது. ஆனால், மேற்படி தீர்மானம் விவாதத்திற்குக்கூட வரவொட்டாமல் தடுக்கப்பட்டது எனின் காங்கிரசில் சமுதாயக் கொள்கை எவ்வளவு தூரம் வெறுக்கப்பட்டிருக்கின்றது என்பதை எல்லோரும் எளிதில் உணர்ந்துகொள்ளலாம். ஆகையால் தற்பொழுது இருக்கும் காங்கிரசில், சமூக சீர்திருத்தத்திற்கு இடமில்லாமல் இருப்பினும் ஆதிக் காங்கிரசுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் யாதொரு வித்தியாசமும் இல்லையாகையால் எனக்கு கேட்டுவிடப்பட்டிருக்கும் கேள்விக்கு இடமேயில்லை. சமுதாய சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்டுள்ள ஒருவனுக்குச் சுயமரியாதை இயக்கத்தைத் தவிர ஓர் நற்சமூகம் இல்லை. மேலும், சுயமரியாதை இயக்கம் நிலைநாட்டப்படும்வரையில் உண்மைக் காங்கிரசுக்குத் தடை ஏற்பட்டுக் கொண்டேவரும்.

இனி பிராமணரல்லாதார் இயக்கத்தைப் பற்றிக் கவனிப்போம். சுமார் 5 வருடங்களுக்கு முன், பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் பிரதமக்கொள்கைகளைப்பற்றி ஓர் வியாசம் எழுதுமாறு என்னை பம்பாய் "இந்தியன் டெய்லி மெயில்" ஆசிரியர் கேட்டுக் கொண்டார்.

அவ்வியாசத்தில் சுருக்கமாக பிராமணரல்லாதார் இயக்கத்தின் கொள்கை சமூக முன்னேற்றம் என்று எழுதியிருந்தேன். அதாவது மக்களிடையே பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதே. இந்த இயக்கம் 12 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது குறித்து ஆச்சரியப்படுகின்றார்கள். ஆனால், நான் ஏன் அதற்கு முன்பாகவே தோன்றவில்லை என்று ஆச்சரியப்படுகிறேன். இந்த இயக்கம் புராண காலங்களிலே இருந்திருக்கிறது என்பதற்குப்பல ஆதாரங்கள் உண்டு. க்ஷத்திரியரான விஸ்வாமித்திரர் பிரம்மரிஷியாக வேண்டும் என்று அகோர தவம் செய்த விஷயமும் அதன் காரணமாக பிராமணரான வஸிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் எழும்பிய அபிப்பிராய பேதமும் எல்லோருக்கும் தெரியும். ஆனால், வசிஷ்டர் புத்தியுள்ள பிராமணராக இருந்தபடியால் தவம்செய்த காரணத்திற்காக விஸ்வாமித்திரரை பிரம்மரிஷியாக ஒப்புக்கொண்டார். ஆனால், தற்கால வசிஷ்டர்களோவெனின் முன்னேற்றம் அடைந்த பிராமணரல்லாதாரையும் கௌரவிக்க முன்வருவதில்லை. பிறவியினாலே உயர்வு தாழ்வு கருதுகின்றார்கள். இதனால்தான் இவ்வியக்கம் இவ்வளவு தூரம் வளர அவசியம் நேர்ந்தது. ஆயினும் நம்கொள்கைகளை பிராமணர்கள் ஒப்புக்கொண்டாலும் இன்னும் கொஞ்சகாலம் நமதியக்கம் இருந்தே தீரவேண்டும். ஏனெனில் நம் சமூகத்திலும் இவ்வேற்றுமை உணர்ச்சி வேரூன்றி இருக்கிறது. ஆகையால் பிறவியினால் உயர்வு தாழ்வு உண்டு எனும் கொள்கை அ

(இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

# "இந்திய மாதா"

(திரு. அய்யாமுத்து எழுதுகிறார்)

(கட்டுரை 11.)

## பஞ்சமர் துயரம்.

பறையனும் சக்கிலியனும் காலமெலாம் கவுண்டர்களுடைய காடு தோட்டங்களில் கூலி வேலை செய்து சாவதற்காகவே சிருட்டிக்கப்பட்டார்களா? காலைமுதல் மாலைவரை பாடுபட்டதல்லாமல் இரவிலும் பட்டிகாத்து ஒரு வேளை ஆகாரமேனும் வயிறு நிறைய உண்ணாமல் வாடியலைவதற்காகவா அவன் பிறந்தான்? நல்ல ஆடைகள் உடுத்தி பிறரைப் போல் சந்தோஷிக்க அவனுக்கு மார்க்கமேதேனுமில்லையா? ஊரின் பள்ளத்தாக்குகளில் உள்ள சின்னஞ்சிறு குடிசைகளில் அவன் காலமெல்லாம் வாழவா? குடிப்பதற்கும் நல்ல தண்ணீரில்லாமல் அழுக்கடைந்த குட்டை நீரையே குடித்து அவன் சாகவா? அவனுடைய குழந்தைகள் கல்வியும், பலதிறப்பட்ட கைத்தொழிலும் கற்க மார்க்கமின்றி ஆடுமாடுகள் மேய்க்கவா உங்கள் ஆண்டவனால் சிருட்டிக்கப்பட்டார்கள்? அவர்கள் பெண்களும் ஆண்களும் நீங்கள் மிருகங்களைவிடக் கேவலமாக மதித்து மிகவும் இழிந்த வசைச்சொல் கூறி அழைக்கப்படவா பிறந்துள்ளார்கள்? நீங்கள் அவர்களை அடித்தாலும், வைதாலும், வேறு கொடுமைகள் பல செய்தாலும், அவற்றினின்று தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு மார்க்கம் எக்காலமும் சித்திக்கப் போவதில்லையா? என்பதே நமது கவலை. உங்கள் தீண்டாமை விலக்குத் தீர்மானங்கள் இவைகளைச் சாதித்து விடுமா என்று கேட்கிறேன். உங்கள் சமய வேடங்கள் இம்மாறுதல் அளிக்குமா என்று கேட்கிறேன். "கோயில் நுழைவு" ஒன்றுமாத்திரம் எங்கள் பஞ்சமனை உயர்த்தும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இம்மையிலே அவனைக் கொடுமைப்படுத்தும் அக்கடவுள் அவனுக்கு மறுமையில் ஏதோ தரவல்லது என்ற நம்பிக்கையும் எனக்கில்லை. மற்றும் அவன் பக்தி மார்க்கத்தில் மூழ்கி உங்களைப் போல ஆனந்தக்கூத்தாட அவனுக்கு நேரமில்லை-காலமில்லை, வயிற்றிலிருக்கும் கருக்குழந்தையும் தொட்டிலில் தூங்கும் சிசுக்குழந்தையும் போக, அவன் குடிசையிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் காலை முதல் மாலை வரை காடு கரைகளில் திணறத் திணற வுழைத்தால்தான் அரை வேளைக் கஞ்சிக்காகிலும் மார்க்கமுண்டு. ஆதலின் அவனுக்கு உங்கள் கோவில் உற்சவாதிகள் வேண்டாம். அவனுக்குப் பலமும், பணமும், நேரமும் ஏற்படும் போது அக்கோவில்களையும் அதிலுள்ள சாமிகளையும் ஆட்டி வைக்கும் சக்தி அவனுக்கு ஏற்பட்டுவிடும். அதைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்.

இன்றைய தினம் அவனுக்கு வேண்டுவது வேலைக்குத் தகுந்த சம்பளம். இதைத் தந்து விடுவீர்களாயின் அவன் வயிறார உண்டு உடல் வளர்க்க முடியும். அவர்களுடைய கேவலமான நிலைமையைக் கவனித்து, விசாரித்து பரிகாரம் தேட உடனே ஒரு விசாரணைக்கமிட்டி தேவை. சைமன் கமிஷன் புஞ்சைப் புளியம்பட்டியிலுள்ள கருப்பச் சக்கிலியனுடைய குறைகளை அறியவில்லை, விசாரிக்கவுமில்லை, யாரும் எடுத்துரைக்கவுமில்லை. அவனுடைய பையனை தாலூகா போர்டு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்க வைக்க அவனுக்குப் பிரியமுண்டு. ஆனால் அவனுடைய பையனை ஆடு மேய்க்கச் சேர்க்காவிடில், அவனையும் பண்ணையத்திலிருந்து துரத்துவதாக அவனுடைய "கவுண்டர்" சொல்லுகிறார். மற்றும் அவனுடைய பையன் பழனி ஆடு மேய்த்து ஐந்து வள்ளம் சம்பாதித்தால்தான் ஒரு ஜீவனுடைய காலம் தள்ளிவரும். இல்லையேல் கருப்பனுடைய படியில் பழனி குடிக்க முடியாது. இந்நிலையில் உங்களுடைய கட்டாயஆரம்பக்கல்வித் திட்டம் என்ன செய்யும் என்று கேட்கிறேன். எங்கள் பழனிக்கு முதலில் வேண்டுவது வயிறுநிறையக் கஞ்சியும், இடுப்பு நிறைய ஆடையும். இவைகளை நீங்கள் இலவசமாக சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து கொடுக்க முடியுமானால் அவனும் படித்து முன்னுக்கு வருவான். இல்லையேல் இல்லை.

பஞ்சமர்களுக்கு தர்க்காஸ்து கொடுத்து விட்டோம் என்று சர்க்காரும் பெருமை பாராட்டுகிறார்கள். வெறும் மேடு பள்ளத்தால் அவனுக்கு என்ன பயன்? அதைத் திருத்தி வேலி போட்டு, பட்டி சேர்த்து, உழவு ஓட்டி, விதைத்து அறுத்தெடுக்க அவனுக்கு முட்டுவரிப்பணம் எங்கே? நீங்கள் கொடுத்த தர்க்காஸ்த்து நிலத்தின் பலன்களை அநுபவித்து வருவதுயார் என்று விசாரணை செய்து அறிந்து பரிகாரம்தேடுங்கள். இரண்டு படி காடு தர்க்காஸ்தில்கிடைப்பதற்குள் அவன் கணக்கையனுக்கும், மணியகாரனுக்கும் ரொக்கமானால் குறைந்தது ஐம்பது ரூபாயும்கடனானால் குறைந்தது நூறு ரூபா 'புரோ' நோட்டும்எழுதிக் கொடுக்கும் சங்கதியும் உங்களுக்குத் தெரியாதா?

பறையனையும் சக்கிலியனையும் மிகவும் கேவலமாக மதிக்கிறீர்கள். ஆனால் அவர்களில் இளம் விதவைகள் இல்லை. அவர்களில் தேவதாசிகள் இல்லை. அவர்களில் விபசார விடுதிகள் இல்லை. அவர்கள் சதா சர்வகாலமும் வக்கீல் மூட்டைகள் சுமந்து கொண்டு கச்சேரி வாசல்களில் அலைவதில்லை. கோயமுத்தூர் ஜில்லா குடித்தனக்கவுண்டர்களைப் போல அவர்கள் குத்தி வீழ்த்திக் கொண்டு தூக்கு மேடைகளில் ஏறிச்சாவதில்லை.

குறுகிய இட்டேரிகளில் நீங்கள் செல்லும் போது உங்களைக் கண்டவுடன் அவன் ஒரே ஓட்டமாய் கள்ளியோரத்தில் ஓடி, தனது காலிலுள்ள செருப்புகளை கழட்டி விட்டு, தலை குனிந்து கைகள் கூப்பி சுவாமி அல்லது புத்தி என்று வணங்கி நின்று நீங்கள் இறுமாப்புடன் அவனைக்கடந்து சென்ற பின்னர் அவன் தன் வழி நோக்கிச் செல்கிறான்.

உங்களோடு அவன் பேசநேர்ந்தால் தனது மிதியடிகளை தூரமாக வைத்துவிட்டு மேல்துண்டு இருப்பின் அதைச்சுருட்டி இடுப்பில் கட்டிக்கொண்டு 'சுவாமி புத்தி' அல்லது 'எசமாங்கோ' என்று மிகவும் பயத்துடன் ஒரு கையை மடக்கி மார்மீதும் மறு கையை வாய் மீதும் வைத்துக் கொண்டு பேசுகிறான். ஆனால் நீங்களோ எடுத்த எடுப்பில் ஏண்டாபடுவா! என்றும், செருப்படி! சாட்டையடி! என்றும் மூர்க்கத்தனமாகவே பேசுகிறீர்கள்.

உங்களுக்கு ஆகாத ஒரு சக்கிலியன் வெள்ளை வேஷ்டி கட்டிக்கொண்டுவந்தால் 'ஏன்டா உனக்கு ஜம்பம் ஏறிப்போச்சோ' என்று உதைப்பீர்கள். ஏதோ நாலு பணமுள்ளவன் தன் குடிசைக்கு வில்லையோடு போட்டிருந்தால், அவன் உங்கள் ஏவலுக்குச் சிறிது பின் வாங்கவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்துவிட்டால் உடனே 'அவனை ஏண்டா சக்கிலிய நாயே! உனக்கு வில்லையோடு மேய்ந்துகொண்ட ஆணவமா' என்று புடைப்பீர்கள்.

குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் உங்கள் வாய்க்கால்களில் அவன் தண்ணீர் மொள்ள வந்தால் ஒரு குடம் தண்ணீருக்காக ஒரு நேரம் வேலை வாங்குவீர்கள். இல்லையேல் கல்லெடுத்து விரட்டுவீர்கள்.

ஆனால் உங்கள் வீட்டில் பிணம் விழுந்தால் சாம வேளையாயினும் ஏம வேளையாயினும் சக்கிலியனைக் கூப்பிட்டு உங்கள் உறவினர் வீடு இரண்டு காதவழியிருப்பினும் செய்தி சொல்லி அவனைக்கால் நடையாய் அனுப்புவீர்கள். அவன் வழிச் செலவுக்குக் காலணாவும் கொடுக்கமாட்டீர்கள். கட்டுச்சாதமும் இல்லை, செய்தி சொன்ன விடத்தில் புளிதண்ணீருமில்லை. ஆனால் நாலுபடி தானியம் கொடுப்பார்கள். அவன் நடந்த அலுப்பித்தீர கள்ளுக்கடையில் கொடுத்து நாலு படி குடித்து விட்டு ஊர் வந்து சேருவான். உங்கள் வீட்டுப்பிணம் சுடுகாடோ இடுகாடோ போய்ச் சேரும் வரை பறையர் சக்கிலியர் வயிற்றில் கள்ளைக் குடங் குடமாய் ஊற்றி ஆடிப் பாடி அழச் செய்வீர்கள். ஆனால் அவர்கள் வீட்டில் யாராவது செத்துப்போனால் சடங்கு செய்யக் காலணாவும் கொடாமல் தடி எடுத்துப் புடைக்க வருவீர்கள்.

நீங்கள் காவடி எடுத்தாலும் பந்தசேர்வை எடுத்தாலும் காகயெடுத்தாலும் கம்பமெடுத்தாலும் உங்களோடு சரியாக நன்றாக ஒன்றாக ஆடிப்பாடி சக்கிலியன் தப்பட்டை அடிக்கலாம், அவன் மீது நீங்கள் மோதி விழலாம், நன்றாய்த் தட்டவில்லையென்று கைப்பிரம்பால் சாத்தலாம், அவன் தப்பட்டையை வாங்கி நீங்களே தட்டலாம், ஆனால் அவனுக்கும் உங்கள் கோயில் சுவாமிக்கும் கடுமையான விரோதம்! அவன் கோயிலுட் புகுந்தால் சுவாமி பறந்துவிடும்!

நீங்கள் அவர்களை உங்கள் பிள்ளைகளோடு சேர்த்து மாடுமேய்க்கலாம், வேலி அடைக்கலாம், பாத்தி பிடிக்கலாம், தண்ணீர் விலக்கலாம், ஏர் ஓட்டலாம், பாம்பு அடிக்கலாம், தாம்பு ஓட்டலாம், தானியம் தூற்றலாம், புடைக்கலாம், வாரிக்கொண்டு வந்ததை வீட்டிலுள் வாங்கி வைக்கலாம், ஆனால் உங்கள் பிள்ளைகளோடு அவர்கள் பிள்ளைகளும் பள்

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

# வருணாசிரமம் ஒழிக.

"நாஸ்திகம் இந்து மதத்தின் ஓர் பகுதி."

திரு எ. ராமசாமி முதலியாரின் சொற்பொழிவு.

15—4—29-உ மாலையில் சென்னை கோகலே மண்டபத்தில் டாக்டர் டி. எம். நாயர் இலக்கிய சங்க ஆண்டு விழா நடைபெற்றது. அப்போது திரு. எ. ராமசாமி முதலியார் "புதிய சமூக இயக்கம்" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சாராம்சம் வருமாறு:—

"தென்னிந்திய புதிய சமூக இயக்கம்" என்னும் பொருள்பற்றி நான் பேசப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தென்னிந்தியாவைப் பொறுத்த விஷயங்கள் நமது நாடு முழுவதையும் பொறுத்ததாகும் என்னும் நோக்கத்தோடு "புதிய சமூக இயக்கம்" என்னும் பொருள்பற்றிப் பேச விரும்புகிறேன்.

இக்காலத்திலே சமூக இயக்கங்கள் எங்கும் வலிமை பெற்று வருகின்றன. உலகமுழுதும் சமூக சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. துருக்கி தேசத்திலே முஸ்தபா கமால்பாட்சா என்னும் சமூக சீர்திருத்த வீரருடைய புனித இயக்கத்தைச் சேர்ந்த மக்கள் தற்கால முறைகளுக்கு ஏற்றபடி சீர்திருத்தம் பெற்று நாட்டை முன்னேற்றமடையச்செய்து சுகமாக வாழ்கிறார்கள். துருக்கி பெற்ற சமூக முன்னேற்றம் இந்தியாவும் கட்டாயம் பெறவேண்டும். இம் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவர்கள் பழைய வழக்கங்களைக் கைப்பற்றிக்கொண்டு அவற்றினின்று முன்னேற்றத்திற்கு அவசியமான துறைகளை எட்டிக்கூடப்பார்க்க முயலாதிருப்பவர்களே. சென்ற 20-வது வருஷங்களாக நம் நாட்டிலே பற்பல மாறுதல்கள் அடுத்தடுத்து ஏற்பட்டன. இப்போதிருப்பதைக்காட்டிலும் இனிய வாழ்க்கையை மனிதன் நடத்தவேண்டும், அரசியல் துறைகளிலே பெரிதும் பேசப்பட்டு வருகிற ஜனநாயகத்துவம் சமூகத்துறையிலும் வழங்கப்படவேண்டும், ஆண் பெண் இருபாலரும் சமம் என்ற உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும் என்னும் சிறந்த சமூக முன்னேற்ற விஷயங்களையே அம்மாறுதல்கள் வற்புறுத்தி வந்திருக்கின்றன. பழைய குப்பைகளைக் கிளறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆனால் காலத்திற்கும், நாட்டிற்கும், நம் அறிவிற்கும் ஏற்ற முறையில் நம சமூகத்தைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்ளுவது அவசியத்திலும் அவசியமாகும்.

இந்து சமூகத்தின் தற்கால நிலை என்ன? தொழில்பற்றி ஏற்பட்ட வகுப்புப்பாகுபாடாகிய வருணாச்சிரமத்தை அடிப்படையாகக்கொண்டது இந்துமதம். சுமார் 2000 அல்லது 3000 வருடங்களுக்குமுன்பு தொழில் பற்றி ஏற்பட்ட இந்தப்பாகுபாடு ஏற்றதாயிருக்கலாம். மனுதர்ம சாத்திரத்தில் கூறியபடி பிராமணத்தொழிலைச் செய்துகொண்டுவரும் பிராமணக்கூட்டம் ஒன்றையும் நாம் இப்போது பார்க்கமுடியவில்லை. மனுதர்ம சாஸ்திரத்தில் சிலருடைய மனதை வருந்தச்செய்யத்தக்க விஷயங்கள் எழுதப்பட்டிருப்பது அதன் வியாக்கியான கர்த்தாக்களால் ஏற்பட்டதாகும் என்று சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட இடைச்செருகல்களையும் மனித உணர்ச்சிக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாத விஷயங்களையும் மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து நீக்கிவிட்டு மீதியுள்ள விதிகளைப் பின்பற்றி நடக்கக்கூடியவர்கள் யாரேனுமுண்டா? என்றுதான் கேட்கின்றேன். தற்காலத்தில் வருணாசிரமத்தைப் பின்பற்றி தொழில் நடைபெறவில்லை.

பிறவி காரணமாகத் தொழில் ஏற்படவில்லை. நாகரிக வாழ்க்கைக்கு இம்மாறுபாடு அவசியமாகத் தெரிகிறது. முற்காலத்தில் இந்தப்பாகுபாட்டிற்கு காரணம் எதுவாயிருந்தாலும் தற்காலத்தில் தொழில் பற்றித்தான் ஜாதியென்றால் அருவருப்பாகத்தோன்றும். இந்த வருணாசிரம தர்மம் ஒழியவேண்டுமென்று சொன்னால் கோபாவேசம் பொங்கி வழிகிற சுபாவமுள்ளவர்கள் சிலருண்டு என்பது எனக்குத்தெரியும். இந்த வருணாச்சிரமதர்மக் கொள்கையின் கொடுமைகளையும் மக்கள் அக்கொடுமைகளுக்குட்பட்டுப் படும் துன்பங்களையும் கண்கூடாகப் பார்த்திருந்தும் இந்த அதர்மம் ஒழியவேண்டும் என்று சொல்லி அந்தத்துறையில் பாடுபடுவோரிடத்து அவர்கள் சீற்றங்கொண்டு துரோகிகள் என்றும், விக்கிரகங்களைத் தகர்த்தெரிபவர்களென்றும், இதுவரை பல நலன்களைத்தந்து வந்திருக்கிற இந்து மதத்தை நாசம் செய்பவர்களென்றும் அவர்களை முறை தவறி இன்னும் பல இழி சொற்களாலும் வசை மொழிகளாலும் அலங்கரிக்கிறார்கள். இவர்கள் மனப்பான்மை இதுவேயானால் இவர்களோடு ஓரே மேடை மீதேறி வாதாடுதல் முடியாத காரியம். இதைப்போலொத்த சமூக விஷயங்கள் சிலவற்றிற்கு வெறும் தர்க்க ஞானம் மாத்திரம் கூடாது. விஷயங்களின் உண்மை நிலையை அறிந்து சீர்திருத்துவதற்கு அந்தத் தர்க்கம் இடங்கொடுத்துத்தானாக வேண்டும். பிறனுக்கு ஏற்படக்கூடிய கொடுமைகளையும் கஷ்டங்களையும் ஒருவர் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமையில்லாதிருந்தால் அவரோடு வாது செய்ய நம்மால் முடியாது.

தற்காலத்திலுங்கூடச் சிலரால் போற்றப்பட்டு வரும் 'பிறப்பினால் உயர்வு' என்னும் கொள்கை தான் என்ன? பிறவியினால் மக்களுக்குள் வேற்றுமை பாராட்டி ஒருவரையொருவர் தீண்டக்கூடாது என்றும், ஒருவர் போகக்கூடிய இடத்திற்கு இன்னொருவர் போகக்கூடாது என்றும் இன்னும் அநேக அர்த்தமற்ற ஆபாசமான கொள்கைகளை உண்டு பண்ணிக்கொண்டதேயாகும். ஆனால் அக்கொள்கைகளை மீற வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டால் அவற்றை மீறிக்கொண்டு வாழ்வதில் பின் வாங்காத வைதீகர்கள் (சிரிப்பு) இதுதானென்ன? தர்க்கம் பகுத்தறிவு, மனித இயற்கை ஆகிய முறைகளுக்கு எதிரில் இது பொருட்படுத்தப்படக்கூடிய ஒரு விஷயமாகுமா? நாசமாக்கும் இந்தக்கொள்கையினாலே தான் இந்து சமூகமானது வேறு எந்த சமூகத்திலுங்காண முடியாத அத்தனை அதிகமான பிரிவுகளாகப் பிளக்கப்படிருக்கிறது. இந்து சமூகம் கண்விழிக்குங்காலம்வந்துவிட்டது. பிறர்குறைகூறுகிறார்கள் என்பதற்காக அவர்கள்மீது கோபித்துக்கொண்டு அவர்கள் கூறும் குறைகளை நீக்கச் சிறிதும் முயலாதிருப்பவர்களை உண்மையான வேதாந்தி என்றோ உண்மையான சித்தாந்தி என்றோ நான் கருதமாட்டேன்.

35 அல்லது 40 வருஷங்களுக்கு முன் அதாவது குருட்டொழுக்க வழக்கங்களும் அறியாமையும் மிகுந்திருந்த காலத்தில், இந்துக்களில் பலர் வேறு மதங்களைத் தழுவத் தலைப்பட்டார்கள். அப்போது கல்வியறிவு பெற்றவர்களுக்குங்கூட தம் மதத்தின் உயர்வைப் பற்றியோ ஆன்ம தத்துவ விசாரணையைப் பற்றியோ அறிவுறுத்தவேண்டியதாகத் தானிருந்தது. ஆனால் அந்தக்காலம் மலையேறிவிட்டது. எதிர்காலத்தில் நமது சமூகக் கட்டுப்பாட்டு விஷயத்தில் மக்களுக்கு உறுதியும் நம்பிக்கையும் உண்டு. வருணாசிரமக் கொள்கைகளைத் தம் வாழ்க்கையில் அனுசரிக்காதவர்களும், தம் மதத்தைப்பற்றித் தெரியாதவர்களும், தம் சமூக முறைகளைத் தெரிந்து கொள்ளாதவர்களும், மனுதர்ம சாஸ்திரத்தில் எங்கேயோ யாரோ அந்த ஜாதி உயர்ந்தது இந்த ஜாதி தாழ்ந்தது என்று எழுதியிருக்கிறது என்று சொல்லுபவர்களும், அற்ப விஷயங்களுக்கெல்லாம் மதம் போச்சு மதம் போச்சு என்று கூப்பாடு போடுகிறவர்களும், இந்து மதத்தையோ இந்து சமூகத்தையோ உறுதிப்படுத்த முடியவே முடியாது என்பதாக நான் சொல்லுகிறேன்.

பெண்கள் நிலை.

இந்துப் பெண்களின் நிலை மிக வருந்தத்தக்கது. பெண்களுக்கு உரிய உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. சிலர் இந்துப் புராணங்களில் வரும் பெண்களின் நிலை உயர்ந்ததாக இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் தற்காலம் பெண்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளுக்கும் புராண முறைகளுக்கும் வெகுதூரம். பெண்களுக்குப் பொருளாதார உரிமை இல்லாமையால் சமூகத்தில் அவர்களுக்குத் தக்க இடமில்லை. ஒருவன் தன் தந்தைக்குப் பின் தந்தையின் சொத்தை அடையலாம். ஆனால் ஒரு பெண் தன் தந்தை கோடீசுவரனாக இருந்தபோதிலும் அந்த சொத்தை யடையமுடியாது. இம்மாதிரியான எல்லாச் சமுதாய விஷயங்களையும் மதத்தின்மீது சுமத்தியதனாலே மதம் பாழ்பட்டது. சமூகத்தைச் சீர்திருத்துவதற்காக சீர்திருத்தக்காரர்கள் மதத்தைத் தாக்குவார்களேயானால், அவர்கள் மீது குற்றஞ் சொல்லக்கூடாது. மதத்தைச் சமூகத்துடனும், சமூகத்தை மதத்துடனும் கலப்பதால் ஏற்படும் தீமைகளை நன்கு உணரவேண்டும். மதத்தையும் சமூகத்தையும் தெளிவாகப் பாகுபாடுபடுத்திப்பிரிக்க, துருக்கி முஸ்தபா கமால்பாட்சாவிற்கிருந்த உறுதி நம்மவர்க்கும் இருக்கவேண்டும்.

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# ஈ ரோ ட் டி ல்

## ஆலயப்பிரவேசமும் அதிகாரிகள் பிரவேசமும்.

ஈரோடு தேவஸ்தான கமிட்டியார் தங்கள் ஆதிக்கத்திற்குள் உள்ள தேவாலயங்களில் இந்துமதம் என்பதைச் சேர்ந்தவர்களுள் சுவாமியை வணங்கவேண்டும் என்கின்ற ஆசையுள்ளவர்கள் எல்லோரும் சுதந்தரமாகவும் ஆசாரமாகவும் ஆலயத்திற்குட் சென்று கடவுளை வணங்கலாம் என்று நிர்மாணித்த தீர்மானத்திற்கிணங்க இந்துக்கள் என்பவர்களில் சிலர் கடவுளை வணங்க ஆலயம் சென்றதற்கு ஆலயக் குருக்கள் உட்கதவைப் பூட்டிவிட்டுப்போய்விட்டதும் பிறகு வெகுநேரம் குருக்கள் வாராததால் கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கென்று சென்றவர்கள் திரும்பிவிட்டதும் பிறகு குருக்கள் கோவில் வெளிக்கதவையும் பூட்டிவிட்டதும், சுமார் 15 நாட்களாக கதவு பூட்டி இருப்பதும் வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். இப்போது அதிகாரிகள் பிரவேசித்து போலீஸ்கார நடவடிக்கை எடுக்கச்செய்து இ. பி. கோ. 295, 297, 109 பிரிவுகளின்படி குற்றம் சாட்டி திடீரென்று வாரண்டு பிறப்பித்து மூன்றுபேர்களை அதாவது திருவாளர்கள் ஈஸ்வரன், கருப்பன், பசுபதி ஆகியவர்களை மாத்திரம் அரஸ்ட்செய்து அன்றைய பகலிலேயே விசாரணைக்குவரும்படி ஜாமீனில் விடப்பட்டது. பகலில் மூன்றுபேர்களும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போனவுடன் உடனே விசாரணை தொடங்குவதாய் மாஜிஸ்ட்ரேட் சொன்னதாகவும் எதிரிகள் தங்கள்மீது சுமத்தப்பட்ட குற்றம் இன்னது என்று தெரியக்கூட முடியாதபடி விசாரிப்பதின் இரகசியம் தெரியவில்லை, ஆகையால் வாய்தா கொடுத்தாலொழிய விசாரணையில் கலந்துகொள்ள மாட்டோம் என்று சொன்னார்களாம். அதற்கு மாஜிஸ்ட்ரேட் பிடிவாதமாகவும் ஆத்திரமாகவும் வாய்தா கொடுக்கப்பட மாட்டாது என்றும், பிராதின் விபரம் தெரியவேண்டுமானால் விண்ணப்பம் போட்டால் நகல் உடனே கொடுக்கப்படும் என்றும் அன்றையே விசாரணைசெய்துகேஸ்முடிக்கப்படும் என்றும் சொன்னாராம். எதிரிகள் மேஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து நீங்கள் ஒரு பார்ப்பனராயிருப்பதாலும் உங்கள் கோபத்தையும் ஆத்திரத்தையும் பார்த்தால் எங்களுக்கு உங்கள் மனப்பான்மை எங்களுக்கே விரோதமாகக் கொண்டிருப்பதாய்த் தெரியவருகின்றதாலும் உங்களிடம் இந்த வழக்கு நடப்பதன் மூலம் நியாயம் எதிர்பார்க்க முடியாதென்றும், வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ள முயற்சிக்கப்படவேண்டியிருப்பதால் வாய்தா கொடுக்கவேண்டும் என்றும் விண்ணப்பம் கொடுத்துக் கேட்டார்களாம். உடனே மேஜிஸ்ட்ரேட்டுக்கு மயக்கமுண்டாகி அந்த விண்ணப்பத்தை ஏதோ சாக்குச்சொல்லி எதிரிகளிடம் கொடுத்துவிட்டு திங்கட்கிழமைவரை வாய்தா கொடுத்திருப்பதாக தாமே உத்திரவிட்டுவிட்டு முச்சலிக்கை வாங்கிக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்களாம். திங்கட்கிழமையன்றும் எதிரிகள் இவ்வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற விண்ணப்பம் போடுவார்கள் என்பதாகத் தெரியவருகின்றது. ஊர் முழுவதும் எதிரிகளுக்கும் எதிரிகளின் செய்கைக்கும் அனுகூலமாகவும் குதூகலமாகவும் இருக்கின்றது. கூட்டங்களுக்கு 1000, 2000 ஜனங்கள் வந்தவண்ணமாய் இருக்கின்றார்கள். தினப்படி மீட்டிங்குகள் நடக்கின்றன. வழக்கை எதிர்வழக்காடாமல் விட்டுவிட்டு இதையே சத்தியாக்கிரகமாகச் செய்து தினப்படி ஜெயிலுக்கு ஆட்களை அனுப்பிக்கொண்டிருக்கலாம் என்பதாகச்சிலரும் எதிர் வழக்காடுவதின்மூலம் உரிமை உண்டா இல்லையா? என்பதை உணர்ந்து பிறகு வேறு ஏதாவது காரியம் செய்யலாம் என்பதாகசிலரும் கருதிக்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. எதற்கும் திரு. ஈ. வெ. ராமசாமியார் இவ்விரண்டுவாரமும் வெளியூர்களிலேயே இருந்திருப்பதால் அதாவது சென்னை, கோயமுத்தூர், பாலக்காடு, கொச்சி, ஆலப்புழை முதலிய இடங்களிலும் கோயமுத்தூர், திருச்செங்கோடு, சேலம் முதலிய இடங்களிலும மகாநாடு காரியமாகவும் முன்னாலேயே ஒப்புக்கொண்டபடியும போகவேண்டியிருந்ததால் இக்காரியங்கள் எதிலும் கலந்துகொள்ளவோ கலந்துயோசிக்கவோ முடியாமல் போய்விட்டது. ஆனாலும் சீக்கிரத்தில் கலந்து ஏதாவது ஒரு முடிவுக்குவரப்படும். எதற்கும் தக்க முன்னேற்பாடுகளுடன் முன்ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அவசியமாகும். ஒரு சமயம் தாராளமாகத் தொண்டர்களும் பணமும் வேண்டி இருந்தாலும் இருக்கும. அதோடு இவ்விஷயம் துவக்கப்பட்டுவிட்டால் சட்டசபைத்தேர்தல்களைப்பற்றி கவனிக்கமுடியாமல்போனாலும் போகலாம். ஆதலால் தேர்தல்விஷயமான சகல பொறுப்பையும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களே எடுத்துக்கொள்ளவிட்டுவிட்டு சுயமரியாதை இயக்கத்தார்களும் மற்றும் சீர்திருத்த கொள்கைக்காரர்களும் இதில் முனைந்து நிற்பதின் மூலம் தீண்டாமைவிலக்கு பிரசாரம் செய்வதும் பொது ஜனங்களுடைய மனப்பான்மையை இன்னும் அதிகமாக நமக்கு அனுகூலமாக்கிக்கொள்ளும் விஷயத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதும் மேன்மையாகும். ஆலயப்பிரவேசஉரிமையைப்பற்றி நமது நாட்டில் பார்ப்பனர்களின் வர்ணாசிரம மகாநாடு ஒன்று தவிர மற்றபடி எல்லா ஸ்தாபனங்களும் இயக்கங்களும் இது சமயம அனுகூலமாகவே இருக்கின்றன. அதாவது சமயசம்மந்தமாக வைணவ சைவ சமய மகாநாடுகளும், அரசியல் சம்மந்தமாக காங்கிரஸ்கள், சுயராஜ்யக்கட்சி, சுதந்திர தேசிய கட்சி, பூரணசுயேச்சைக்கட்சி, ஹோம்ரூல் கட்சி ஜஸ்டிஸ் கட்சி எனும் தென்இந்திய நலஉரிமைக்கட்சி மற்றும் சமூக சம்மந்தமான எல்லா இயக்கங்கள் மகாநாடுகள் இந்து மகா சபை மார்வாடிசபை மற்றும் அநேக பொதுகூட்டங்களும், கடைசியாக எல்லாக்கட்சியார் மகாநாடு என்பதும், நேரு திட்டம் என்பதும், மந்திரிகள் உபன்யாசங்களும், சைமன் கமிஷனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட யாதாஸ்துக்களும் மற்றும் எல்லா தலைவர்கள் என்பவர்களும் பிராமணன் என்கின்ற பத்திரிகை தவிர மற்றபடி எல்லாப் பத்திரிகைகளும் குறிப்பாக பிரஸ்தாப கோவில் சம்பந்தப்பட்ட தேவஸ்தான கமிட்டியும் அனுகூலமாக இருப்பதோடு அல்லாமல் தேவஸ்தான இலாகா மந்திரியினுடையவும் எண்டோமெண்ட் போர்ட் மெம்பர்களினுடையவும் அபிப்பிராயமும் கடைசியாக கவர்மெண்டினுடைய போக்கும் இச்செய்கைக்கு அனுகூலமாக இருப்பதுடன் ஆதரிப்பும் இருந்துவருகின்றது. இவ்வளவு ஆதரிப்பும் அனுகூலமும் இருப்பதோடு நமது நாட்டில் பணமும் தொண்டர்களும் தாராளமாய் கிடைக்கத்தக்கவண்ணம் தேசநிலையும் இருந்துவருகின்றது. எனவே இம்மாதிரியான முயற்சிக்கு இனி இதைத்தவிர வேறு ஒரு தக்கசந்தர்ப்பம் கிடைக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. எனவே இந்தக்காரியம் முக்கியமா அல்லது சட்டசபை தேர்தல் காரியம் முக்கியமா என்று யோசித்தால் தேர்தலைவிட இதுவே முக்கியமென்று அநேகருக்கு தோன்றலாம் என்றே கருதுகின்றோம். ஆதலால் எதற்கும் பணக்காரர்களும் தொண்டர்களும் தயாராய் இருக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## கோயமுத்தூர் சேலம் சட்டசபை அபேட்சகர்கள்.

அடுத்த சட்ட சபை தேர்தலுக்குக் கோயமுத்தூர் ஜில்லாவுக்கு இதுவரை பல கனவான்கள் பெயர்சொல்லிக்கொள்ளப்படுகிறதானாலும் முக்கியமாக திருவாளர்கள் பழையகோட்டைப் பட்டக்காரர், ஊத்துக்குளி ஜமீன்தார் குமார ராஜா, சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், டி. எ. இராமலிங்கஞ்செட்டியார், வி. சி. வெள்ளியங்கிரிக்கவுண்டர், பீளமேடு பி. எஸ். ஜி & சன்ஸ், சோபி டி. சீனிவாசய்யர் முதலிய கனவான்களின் பெயர்கள் அதிகமாகச் சொல்லிக்கொள்ளப்படுகின்றது,

சேலம்:—சேலம் ஜில்லாவிற்கு திருவாளர்கள் எஸ். எல்லப்ப செட்டியார், டாக்டர் சுப்பராயன், பி. வரதராஜலு, ராஜமாணிக்க பண்டாரம், சி. விஜயராகவாச்சாரி, சி. ராஜகோபாலாச்சாரி, எம். டி. சுப்பராயர், கொங்கணாபுரம் ஜமீன்தார் தர்மபுரி டி. எ. கந்தசாமிசெட்டியார், பி. முனுசாமிகவுண்டர் முதலியவர்கள் பெயர்களே அதிகமாகச் சொல்லிக்கொள்ளப்படுகின்றது.

இந்தியசட்டசபைக்கு:—திருவாளர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பெயர் சொல்லிக்கொள்ளப்படுகிறது. பி. வரதராஜுலுவுக்கு ஆசையிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

## எலக்ஷனுக்குப் புதிய சூழ்ச்சி.

### வாசருக்கும் மூர்த்திக்கும் சம்பாஷணை.

(சித்திர புத்திரன் எழுதுவது)

வாசர்—என்ன மூர்த்தி! இந்தத்தடவை சட்டசபை எலக்ஷன் ரொம்பவும் மோசமாய் முடியும்போலிருக்கின்றதே என்ன செய்வது?

மூர்த்தி—ஏன் இந்தமாதிரி நினைக்கின்றீர்கள்? நமக்கென்ன குறைவு? காங்கிரசு இருக்கின்றது, காந்தி இருக்கின்றார். தவிர எல்லோரையும்விட வெகு தீவிரக்காரர்களாக வேஷம் போட்டுக்கொண்டு பூரணசுயேச்சை கேட்கின்றோம். இவைகள் தவிர சைமன் பஹிஷ்காரத்தின் மூலம் நாம் பெரிய அமிதவாதிகளாகி இருக்கின்றோம். இவ்வளவு சங்கதிகள் நமக்கு அனுகூலமாயிருக்கும்போது நாம் ஏன் எலக்ஷன் விஷயத்தில் பயப்படவேண்டும்?

வாசர்—இதெல்லாம் இனி நடவாது. காங்கிரஸ் வேஷம் வெளுத்துப் போச்சுது. இனியாரும் காங்கிரசின் பேரால் ஏமாறுவார்கள் என்று எதிர்பார்ப்பது முழுகிய ஒரு கைமுழைக்கு வைத்தியம் செய்துகொள்ளுவது போல் தான் முடியும். உதாரணம் வேணுமானால் ஒரு இரகசியம் சொல்லுகின்றேன் கேள். நமது மிஸ்டர். சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் ஆரம்பவிக்கி நிற்கிறார். அவர் காங்கிரஸ்பேரால் நிற்கமுடியாது என்று சொல்லிவிட்டு தனியாக நிற்கிறார் பார். நான் நேரில் கேட்டுக்கொண்டுகூட அவர் காங்கிரஸ்பேர் சொன்னால் இனி ஓட்டுக் கிடைக்காது என்று வெளிப்படையாய்ச்சொல்லிவிட்டு ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களிடம்போய் தொங்கிக்கொண்டிருக்கிறார். இதிலிருந்தே காங்கிரசிற்கு எவ்வளவு யோக்கியதை என்பதைத்தெரிந்துகொள்.

மூர்த்தி—சரி காந்தி இருக்கின்றாரல்லவா?

வாசர்—அதுவும் இனி நடவாது. அவருக்கு ஆந்திரநாட்டில் ஏதாவது செல்வாக்கு இருக்குமோ என்னமோ தெரியவில்லை. தமிழ்நாட்டில் அவர் பாச்சா இனி பலிக்காது ஆதலால் அவரை நம்புவதிலும் பயனில்லை.

மூர்த்தி—பூரணசுயேச்சை சைமன் பகிஷ்காரம் இவைகள் இருக்கின்றனவே?

வாசர்—பூரணசுயேச்சை நாறிப்போய் விட்டது. சைமன் பகிஷ்காரமோ உதையும் அடியும் படாமல் தப்பித்துக்கொண்டால் போதும் என்கின்ற நிலைக்கு வந்துவிட்டது. இவையெல்லாம் உனக்குத் தெரியாதா என்ன?

மூர்த்தி—சரி இவைகள்தான் போகட்டும். வழக்கம்போல் நம்மகூட ஆள்களும் பத்திரிகைகளும் உண்டல்லவா? அவர்கள் எப்படியும் நம்முடன் இருந்து நமக்கு வெற்றிசம்பாதித்துக் கொடுக்கவேண்டியது அவர்களது சுமையல்லவா?

வாசர்—எல்லா பத்திரிகைகளின் யோக்கியதையும் போய்விட்டது. எல்லா கூலி ஆட்களின் யோக்கியதையும் கெட்டுப்போய் விட்டது. இனி எவன் இருக்கின்றான் முன்போல நமக்குப்பாடுபடுவதற்கு? எல்லோரும் திருட்டுபயல்களாகி விட்டார்கள், அங்கும்வாங்கிக்கொள்ளுகின்றார்கள் இங்கும் வாங்கிக்கொள்ளுகின்றார்கள். நம்மிடம் ஒன்று பேசுகின்றார்கள் அவர்களிடம் ஒன்று பேசுகின்றார்கள். யாரையும் நம்புவதற்கில்லை. பத்திரிகைக்காரர்களும் ஒரு நாளைக்கு அவர்களை வைவதும் ஒருநாளைக்கு நம்மைவைவதுமாகி யாதொருநிலையும் இல்லாமல் போய் செல்வாக்கும் இல்லாமல் போய்விட்டது. நாமாவது ஒரு பத்திரிகை வாங்கி நடத்தலாம் என்றால் அதற்கும் நாட்டில் ஆதரவு கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. எப்படியும் இந்தத்தடவை நமதுபாடு சற்று கஷ்டம்தான் என்று எனக்கு தோன்றுகின்றது.

மூர்த்தி—நீங்கள் இப்படி எல்லாம் நினைத்து மனதை விட்டுவிடாதீர்கள். தைரியமாயிருங்கள். எப்படியாவது வேலை செய்யலாம்.

வாசர்—எப்படி வேலைசெய்வது? நான்தான் எல்லாவற்றையும் பார்த்துதானே சொல்லுகின்றேன். இந்த ஒருவருஷமாய் எல்லா தேர்தலிலும் அவர்களேவெற்றிபெற்று வருவதும் அவர்களுக்கு எதிரிடையாக கேண்டிடேட் போடக்கூட நமக்கு ஆளில்லாமல் திண்டாடி அன் அப்போஸ்டாய் விட்டு விட்டதும் அவர்களுக்குள்ளாகவே கட்சி உண்டாக்கலாம் என்று பார்த்தாலும் முடியாமல் போவதும் நாம் பார்த்துதானே வருகின்றோம்.

மூ—என்ன இருந்தாலும் தாங்கள் பயப்படவேண்டியதில்லை, நான் சில ஆசாமிகளிடம் கலந்தேன். அவர்கள் நமக்குத் தைரியம் சொல்லி இருக்கின்றார்கள்.

வா—அது யார் சொல் பார்ப்போம்.

மூ—மிஸ்டர் நமது அருமை முதலியார் மற்றும் அவர் மாதிரியே இன்னும் ஒன்று இரண்டு ஆசாமி ஆகியவர்களைப் பார்த்தேன்,

வா—அவர்கள் என்ன சொன்னார்கள்?

மூ—அவர்களும் தாங்கள் சொன்னது போல்தான் காங்கிரசு முதலிய நமது பழைய் சூழ்ச்சி ஸ்தாபனங்களுக்குமதிப்புப் போய்விட்டதென்றும், ஆனாலும் வேறு வழியில் ஏதாவது வேலை செய்யலாம் என்றும், ஆனால் அதற்குக் கொஞ்சம் செலவு அதிகம் பிடிக்குமென்றும், முன்போன்ற கூலிகளைப் பிடித்தால் முடியாதென்றும் வேறுமாதிரி ஆட்களைப் பிடிக்கவேண்டும் என்றும் சொன்னார்கள்.

வா—அது என்ன? சொல் பார்ப்போம்.

மூ—அதுவா? சென்ற தேர்தலில் ஒரு தந்திரம் செய்தோமே அதாவது அவர்கள் தேவஸ்தான சட்டம் செய்ததால் மதத்தில் கைவைத்துவிட்டார்கள் மதத்தில் சர்க்காரைப் பிரவேசிக்கச் செய்து விட்டார்கள் என்று கூப்பாடு போட்டோமே அதுபோல் இந்தத்தேர்தலுக்கும் ஏதாவது தந்திரம் செய்யலாம் என்றும் அதாவது சுயமரியாதை இயக்கம்தான் ஜஸ்டிஸ் இயக்கம் என்றும் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம், அது மதத்தையும் மதப் பெரியார்களையும் வைவதுடன் கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது என்றும் பிரசாரம் செய்வதன்மூலம் பாமர மக்களை ஏமாற்றி ஒருவிதத்தில் ஓட்டு வாங்கிவிடலாம் என்றும் ஆனால் அதற்கு, முன்னைய கூலிகள் மாதிரி ஆட்களை வைத்தால் பொது ஜனங்கள் காது கொடுக்கமாட்டார்கள் என்றும், சற்றாவது தமிழ் புராணம் கதை முதலியவைகளில் பரிச்சயமுள்ளவர்களாக பார்த்துப்பிடித்து அவர்களுக்குப்பண்டிதர்கள் பக்தியான்கள் சமய அபிமானிகள் என்று பெயர் கொடுத்து பிரசாரத்திற்கு அனுப்பவேண்டும் என்றும், ஆனால் அவர்கள் முன் போல் மாதம் 20, 30 க்கு வரமாட்டார்கள் என்றும், குறைந்தது 50 ரூபாயும் செலவும் கொடுக்கவேண்டும் என்றும் இந்தப்படி செய்வதானால் தம்மிடத்தில் சில ஆட்கள் இருப்பதாகவும் தாமும் வாய்வாயாய்ச் சுற்றுவதாகவும் தமது பத்திரிகையையும் இதற்கே விட்டு விடுவதாகவும் சொன்னார்கள்.


வா—செலவைப்பற்றி கவலையில்லை, காங்கிரஸ் பணந்தானே, நமக்கு என்ன நஷ்டம்? வேண்டுமானால் மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவேண்டியது காங்கிரசின் கடமை என்று காங்கிரஸ் கமிட்டியில் (காரியக் கமிட்டியில்) ஒரு தீர்மானம் செய்துகொள்ளலாம். ஆனால் இந்த ஆசாமிகள் மீறாமல் கட்டுப்பாடாய் இருப்பார்களா? என்பதுதான் பயமாயிருக்கின்றது. ஏனெனில் இவர்களை நான் நன்றாய் அறிந்தவன்.

மூ—அதைப்பற்றி தாங்கள் பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இந்த ஆட்களை இனி அவர்கள் கண்டிப்பாய் சேர்க்கமாட்டார்கள், ஆதலால் இவர்களுக்கு நம்மைவிட வேறு கதியில்லை. அதோடு அவர்களது சுயநலத்திற்கும் அனுகூலமாகின்றது. ஆகையால் இதுதான் நமக்கு அனுகூலம் வேறு யாதொரு மார்க்கமும் இல்லை,

வா—சரி அப்படியே செய்வோம். அந்த ஆட்களை நான் வரச்சொன்னதாக உடனே ஒரு ஆள் அனுப்பு. மேலும் சுயமரியாதை இயக்கத்தை வைத்துக்கொண்டு அவர்கள் நமக்கு எப்படி வேலை செய்யமுடியும்?

மூ—எப்படி இது தங்களுக்குத் தெரியாதா? சுயமரியாதை இயக்கத்துக்காரர்கள் மீது ஏதாவது பழியைப்போட்டு "ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுக்கொடுக்காதீர்கள்" என்று சொல்லவேண்டியதுதானே. அதெல்லாம் அவர்களைச் சேர்ந்தது. நமக்கு ஏன் அந்தக் கவலை. நாம் ஒப்பந்தம் பேசிக்கொள்ளவேண்டியது, அவர்கள் எப்படியாவது வேலை செய்ய வேண்டியது அவ்வளவுதான். ஏனென்றால் சென்ற தேர்தலில் மிஸ்டர் கல்யாணசுந்தரமுதலியார் மிஸ்டர் ராமசாமி முதலியாருக்கு விரோதமாய் செங்கற்பட்டு ஜில்லாவில் நமக்காகப் பிரசாரம் செய்யும்போது 'குழந்தைகள் சாகின்றன, அரிசி ரூபாயிக்கு இரண்டுபடியாகிவிட்டது, இந்தியரின் சாராசரி வயது 23 ஆகிவிட்டது ஆதலால் ராமசாமி முதலியாருக்கு ஓட்டு செய்யாதீர்கள்" என்று சொல்லவில்லையா? அதுபோல் ஏதோ அவர்கள் பாமர மக்களை ஏமாற்றத் தக்கபடி சொல்லிக்கொள்ளுவார்

(இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு

ஈரோடு சுக்ல-ஹூ சித்திரை-மீ 9-உ.


## கண்ணில்லையா?

### இந்திய சட்டசபைக்கு இன்னும் எத்தனை ஐயங்கார்கள்?

தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் என்னும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும் சுயமரியாதை இயக்கம் என்னும் சமாசமும் சன்மார்க்கமுங்கொண்ட இயக்கமும் தமிழ்நாட்டில் எவ்வளவோபெரிய கிளர்ச்சியையும் புத்துணர்ச்சியையும்உண்டாக்கியிருப்பதாகச்சொல்லப்பட்டாலும் அவைமுக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியங்களில் முக்கியமானதான துறைகளில் இன்னமும் தலைவைத்துக் கூடப்படுக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது.

மேற்கண்ட இரண்டு இயக்கங்களும் வெற்றிபெற வேண்டுமானால் அவற்றின் கொள்கைகளில் பெரும்பான்மையானவைகள் அரசாங்க சட்டத்தின் மூலமும், அரசாங்க நடு நிலைமை மூலமும், சில அரசாங்க உத்தியின் மூலமுமே வெற்றிபெறவேண்டியிருக்கின்றதென்பது யாவரும் அறிந்ததாகும். அரசாங்க சட்டங்களில் முக்கியமானவைகள் பல இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்படவேண்டியிருப்பதும் இந்திய அரசாங்க நிர்வாகசபையின் ஆதரவு பெறவேண்டியிருப்பதும் யாரும் அறியாததல்ல.

அப்படியிருக்க தென் இந்தியாவில் சிறப்பாக தமிழ்நாட்டின் சார்பாக இந்தியா சட்டசபைக்குள்ள பிரதிநிதிகள் 7 பேர்களில் 6 பேர்கள் [illegible] சமூகாயத்திற்கும் சமாசத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் பரம்பரை விரோதிகளான பார்ப்பனர்களே—சிறப்பாக ஐயங்கார் பார்ப்பனர்களே நமது பிரதிநிதிகளாயிருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டு [illegible] முற்போக்கிற்கு முட்டுக்கட்டைகளாக அங்கு (இந்திய சட்டசபையில்) உட்கார்ந்துகொண்டு இருக்கின்றார்கள்.

அதாவது மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு என்று திரு. எம். எஸ். சேஷையங்காரும் திருச்சி தஞ்சை ஜில்லாக்களுக்கு என்று திரு. ஏ. இரங்கசாமி ஐயங்காரும் செங்கல்பட்டு தென் ஆர்க்காடு ஜில்லாக்களுக்கு என்று திரு. எம். கே. ஆச்சாரியாரும் சென்னைக்கு என்று திரு. எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரும் சித்தூர் வகைரா ஜில்லாக்களுக்கு என்று திரு துரைசாமி ஐயங்காரும் தென் கன்னடம் மலையாளம் ஜில்லாக்களுக்கு என்று திரு. கே. வி. இரங்கசாமி ஐயங்காரும் ஆக ஆறுபேர்கள் ஐயங்கார்களாக அமர்ந்துகொண்டார்கள்.

கோயமுத்தூர், சேலம், வட ஆர்க்காடு, ஆகிய ஒரு தொகுதிக்குமாத்திரம் கோயமுத்தூர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஒருவர்மாத்திரம் இருந்து வருகின்றார்.

இதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போமானால் ஐயங்கார்களின் ஆதிக்கமும் அவர்களின் காங்கிரஸ் புரட்டும் அவர்களது கூலிகளின் தேசீயப்புரட்டும் என்றுசொல்லிவிடலாமானாலும் பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் என்பவர்களின் மீதும் குற்றஞ்சொல்லாமலிருக்க முடியவில்லை.

என்னவெனில், பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கு பெரிதும் சென்னை சட்டசபையின் மீது ஆவல் இருக்கின்றதேயல்லாமல் இந்திய சட்டசபையைப்பற்றி அவர்களுக்குச் சிறிதும் கவலை உண்டாவதில்லை.

ஏனெனில், சென்னை சட்டசபைக்குப் போனால் மந்திரி ஆகலாம், மந்திரி ஆக முடியாதவர்கள் மந்திரிகளுக்கு வால் பிடித்துக்கொண்டோ அல்லது பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு மந்திரிகளை கவிழ்த்துவிடுவதாய் மிரட்டிக்கொண்டோ ஜில்லா தாலூகா போர்டு முனிசிபாலிட்டி ஆகியவைகளின் ஆதிக்கங்களை கைப்பற்றவும் உத்தியோகங்கள் சம்பாதிக்கவும் இன்னும் வெளிப்படையாய்ச் சொல்வதென்றால் பலவழிகளில்சிலர் பணம் சம்பாதிக்கவும் ஆன காரியங்களில் சித்திபெறக்கூடும் என்கின்ற ஆசையும் இந்திய சட்டசபைக்கு போவதால் பிரயாணப்படியில் ஏதோ இரண்டு பிச்சைக்காசு மீதி ஆவதைத்தவிர வேறுபலன் உண்டாகாது என்கின்ற அலட்சிய புத்தியும் முக்கிய காரணமாகும்.

ஆனால், பார்ப்பனர்கள் தங்களுக்குத் தமிழ்நாட்டில் செல்வாக்கில்லை என்பதும் சட்டசபை ஸ்தானம் கிடைக்காதென்பதும் தீர்மானமாகத் தெரிந்தவுடன் இதை விட்டு விட்டு பார்ப்பனரல்லாதார் அலட்சியமாய்க் கருதும் இந்திய சட்டசபையில் ஸ்தானத்திற்கு நின்று வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்திற்கு வேண்டிய காரியங்களை நோகாமல் சாதித்துக்கொண்டு வருகின்றார்கள். அதோடு இந்திய சபைக்கு வெறும் பார்ப்பனர்களாகவே தமிழ்நாட்டுக்கும் ஆந்திர நாட்டுக்கும் பிரதிநிதிகளாக ஏற்பட்டு விட்டதாலும் திருவாளர்கள் நேரு, மாளவியா, கேல்கார், கோஸ்வாமி முதலிய பார்ப்பனர்களே பம்பாய் அலகாபாத் வங்காளம் முதலிய மாகாணத் தலைவர்களாகவும் ஏற்பட்டு அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அம்மாகாணங்களின் பிரதிநிதிகளாய் இந்தியா சட்டசபையில் உட்கார்ந்து கொண்டிருப்பதாலும் இந்திய சட்ட சபை பார்ப்பனக்கோட்டை என்றும் அதனாலேயேபெரிய பெரிய இந்திய உத்தியோகங்கள்எல்லாம்பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாகவும் பரம்பரை பாத்தியமாகவும் அனுபவிக்க வசதியாகவும் இருந்து வருகின்றது. இதைப்பற்றிப் பல தடவைகளில் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

இப்படிக்கெல்லாம் இருந்தும், இப்போது, அதாவது சமீபத்தில் வரப்போகும் இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு இத்தனை ஐயங்கார் பார்ப்பனர்கள் இருப்பது போதாமல் இன்னமும் ஒரு ஐயங்கார்—அதுவும் வருணாசிரம ஐயங்கார்—மதுவிலக்கு பிரசாரம் செய்தால் மதுபானம் அதிகமாகிவிடும் ஆதலால் மதுவிலக்குபிரசாரம் செய்யக்கூடாது என்று சொல்லும் ஐயங்கார்—ஆயிர ஆயிரக்கணக்காகத் தென்னை மரங்களின் கள்ளினால் பல ஆயிர ரூபாய் சம்பாதிக்கும் ஐயங்கார்—ஒத்துழையாமையின் போது பதினாயிரக்கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு தாம் மாத்திரம் காங்கிரசை விட்டு ஓடிப்போய் காங்கிரசுக்கு விரோதமாய் பிரசாரமும் செய்து காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாய் சட்ட சபைக்கும் போய் உட்கார்ந்துகொண்டு இருந்த ஐயங்கார்—சென்ற தேர்தலில் காங்கிரசின் பேரால் நின்று வெற்றி பெற்று காங்கிரசுக்கு விரோதமாய் மந்திரி சபைகளை ஏற்படுத்தி அதற்கு ஆதரவளித்துவிட்டு 'இது சரிதானா' என்று கேட்டவர்களுக்கு 'ஜஸ்டிஸ் கட்சியை அழிப்பதற்காக மந்திரி சபையை ஆதரித்தேன்' என்று சொன்ன ஐயங்கார்—மற்றும் சென்னை சட்ட சபையில் இருந்த 9 வருஷ காலமாக பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் நேர் விரோதமாயிருந்ததுடன் பார்ப்பனரல்லாதார் மந்திரிகளைக்கவிழ்க்கவே வெளிப்படையாயும் இரகசியமாயும் சூழ்ச்சிகளும் வேலைகளும் செய்து வந்த அய்யங்கார்—இன்னும் எத்தனையோ வழிகளில் பார்ப்பனரல்லாருக்கு இடையூறு செய்துவரும் ஐயங்கார் திருவாளர் கோவை சி. வி. வெங்கட்ரமண ஐயங்கார் அவர்கள் இந்திய சட்டசபைக்கு ஒரு அபேட்சகராக நிற்கப்போவதாகத்தீர்மானித்து ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார். இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பனகாலரசருக்குப்பின் தலைவராகக்கருதப்படும் ராஜா சர். அண்ணாமலைசெட்டியாரவர்கள் உதவியிருப்பதாகவும்பார்ப்பனரல்லாதார்களுக்குள் சிறந்த அறிவாளியும் இயக்கப்பிரமுகர்களில் முதன்மையானவருமான திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் ஆதரிப்பதாகவும், மற்றும் கோவைபிரமுகரான திரு. ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் ஆதரிப்பதாகவும், சுயமரியாதை இயக்கத்தின் பிரதான பிரமுகரான திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஆதரிப்பதாகவும் பிரஸ்தாபத்தை கிளப்பி விட்டு ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் மயக்கி வருவதும் அதற்கு ஏற்றாற்போல் பலபார்ப்பனரல்லாத கனவான்களின் கையொப்பமும் பெற்றி

ருப்பதாக சொல்லிக் கொள்ளுவதுமேயாகும். திரு. ராஜா. சர். அண்ணாமலையாரின் பெயரை திரு. அய்யங்கார் சொல்லிக்கொள்வதில் பொது ஜனங்கள் நம்பி ஏமாந்து போகும்படியான ஒரு சந்தர்ப்பம் திரு ஐயங்கார் ஏற்படுத்திக்கொண்டது மிகவும் மதிக்கத்தகுந்த தந்திரமே யாகும். அதென்னவென்றால் ராஜா சர் அண்ணாமலையாரின் உருவச்சிலை சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு கமிட்டியில் திரு. சி. வி. வெங்கட்டராமணஐயங்கார் அவர்கள் தந்திரமாக தம்மை ஒரு செக்ரட்டரியாக ஆக்கிக்கொண்டதால் பொது ஜனங்கள் ராஜா சர் அவர்களின் உருவச்சிலை கமிட்டிக்கு திரு ஐயங்கார் காரியதரிசியாக யிருப்பதால் திரு ராஜா. சர். அவர்கள் திரு அய்யங்காருக்கு உதவி செய்தாலும் செய்யக்கூடும் என்று சகஜமாகநினைப்பதற்கு இடமேற்படுவது தான். ஆனால் நமது ராஜா. சர். அவர்கள் இதைப்போல் ஆயிரத்தெட்டு ஐயங்கார்களின் போக்கியதைகளை அறிந்தவர் ஆகையால் இந்தப்பெயரைக் கொண்டு யாரும் அவரை சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம். தவிர கோயமுத்தூர் பிரமுகர்கள் திரு ஐயங்காருக்கு ஆதரவளிப்பதாய்ச் சொல்லிக் கொள்ளுவதிலும் உண்மை இருக்கலாமோ என்னமோ என்பதாக சிலர் சந்தேகப்படவும் இடமிருக்கின்றது.

என்னவெனில், கோவைப்பிரமுகர்கள் திருவாளர்கள் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், ஆர். கே. ஷண்முகம், டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், பட்டக்கார எஜமானர் ஆகியவர்கள் எப்படியாவது கோமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரை ஐயங்காரின் தொல்லை ஒழிந்தால் போதும் அவர் வேறு எந்தத் தொகுதியிலாவது நின்றுகொள்வதின் மூலம் தங்களுக்கு உபத்திரவமில்லாமல் இருப்பதானால் சரி என்று நினைத்து திரு ஐயங்காருக்கு உதவி செய்வதாக ஜாடை காட்டி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்த ஜாடைகள் திரு ஐயங்காரை கோயம்புத்தூர் ஜில்லாவை விட்டு வெளியாக்கத்தான் உதவுமே ஒழிய உண்மையிலேயே அந்தணவான்களுடைய ஆதரவு பெறமுடியுமா என்பது யோசிக்கவேண்டிய விஷயமாகும். திரு. ஆர். கே. ஷண்மும் அவர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள செய்திகளில் காணப்படுவதென்ன வென்றால் திரு. வெங்கட்டராமண ஐயங்கார் காங்கிரஸ் அபேக்ஷகராக நிற்கவில்லை என்றும் காங்கிரஸ் திரு. ஐயங்காரை ஏற்றுக்கொள்ளப போகின்றதா என்பது தெரியவில்லை என்றும் ஆதலால் தாம் சி. வெங்கிட்டராமணஐயங்காருக்கு உதவி செய்ய முடியாது என்றும் தெரிவித்திருக்கின்றார்.

அதுபோலவே திரு. இரத்தினசபாபதி முதலியாரும் ஜஸ்டிஸ் கட்சி திரு. வெங்கட்டராமணஐயங்காரை ஆதரிப்பதானால் மாத்திரம்தான் திரு. ஐயங்காருக்கு உதவி செய்ய முடியுமென்றும் இல்லாவிட்டால் முடியாது என்றும் தெரிவித்து விட்டார்.

(இது "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்று கூப்பிடத்தடையில்லை" என்பது போன்ற உதவி)

திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் திரு. வெங்கட்டராமணஐயங்கார் அவர்களின் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு உதவி செய்ய முன் வருவார்களானால் ஒன்று திரு இராமசாமி முதலியார் இராமசாமி ஐயங்காராக மாறி பூணூல் போட்டுக் கொள்ள வேண்டும் அல்லது திரு. வெங்கட்டரமண ஐயங்கார் பூணூலை அறுத்து விட்டு வெங்கட்டரமண முதலியார் ஆகவேண்டும், இவ்விரண்டும் இல்லாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டதாகச் சொல்லப்படுமானால் இரண்டு பேருக்கும் நடுவில் ஏதாவது இரகசியம் இருக்கவேண்டும் அப்படிக்கு இல்லாமல் இந்தக்காரியம் ஆவதல்ல என்றே உறுதி கூறுவோம்.

நிற்க திரு. அய்யங்கார் நிற்கும் தொகுதியைப்பற்றி சற்றுயோசித்தால் திரு, அய்யங்கார் அபேக்ஷகராக நிற்பதாக வெளிப்படுத்தி யிருக்கும் தொகுதி சென்னை மாகாண இந்திய வர்த்தகர்கள் தொகுதியாகும். இத்தொகுதிக்கு ரூ 350 க்கு மேல் பட்டு வருமானவரி செலுத்துபவர்கள் ஓட்டர்களாக பதிவு செய்யப்படுபவர்கள், இத்தொகுதிக்கு சுமார் 2000 ஓட்டர்கள் உண்டு. இதில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சுமார் 500 அல்லது 600 பேர்களாவார்கள். மற்றபடி மீதிஉள்ளவர்கள் வியாபாரிகளும் லேவாதேவிக்காரர்களும் ஆவார்கள். இந்த தொகுதிக்கு ஒரு பிரபலமானவரும் பெருத்த வியாபாரியும் வியாபார அனுபவமும் வியாபார சம்பந்தமான விஷயங்களில் ஆராய்ச்சி அறிவும் உள்ளவர்ளும் நிற்கவேண்டியது நியாயமும் அவசியமும் ஆகும்.

அப்படியிருக்க திரு. வெங்கிட்டராமண அய்யங்காருக்கு அத்தொகுதியில் என்ன வேலைஎன்பது நமக்கு விளங்கவில்லை. "இரும்புஅடிக்கும்களத்தில் ஈக்கு என்னவேலை" என்பதுபோல் வியாபாரத் தொகுதியில் வருணாச்சிரமப் பார்ப்பனருக்கு என்ன வேலை? பிராமணன் வியாபாரம் செய்வதும் இந்தியன் கப்பலேறுவதும் பாவம், சண்டாளத்துவம், பிராமணீயத்திற்கு விரோதம் என்று வேதமும் மனுதருமமும் வருணாசிரமும் சொல்லுகின்றது. இந்தக்காரணத்தினாலேயே திரு. காந்தியும் திரு. லஜபதியும் சண்டாளர்களாகக் கருதப்பட்டு கோவிலுக்குள் விடப்படவில்லை.

எனவே வியாபாரத் தொகுதிக்கு நிற்கும் அபேட்சகருக்கு வெளிநாட்டுக்குப் போய்வந்த அனுபவமும் வெளிநாட்டு வியாபார இரகசியமும் வெளிநாட்டு நாணய மாறுதல்களின் தத்துவ நிபுணத்துவமும் வியாபாரத்தில் அபார பரிச்சயமும் வேண்டியதாகும். அதற்காகவே இந்த ஸ்தானம் ஒதுக்கப்பட்டதாகும். அப்படியிருக்க விவசாயிகளின் ஸ்தானங்களாகிய பொது ஸ்தானங்களையும் பார்ப்பனர்களே அதாவது அய்யங்கார் பார்ப்பனர்களே கைப்பற்றிக் கொண்டதோடல்லாமல் வியாபார ஸ்தானங்களையும் அய்யங்காரே கைப்பற்றுவதென்றால் தமிழ் நாட்டில் தமிழ் மக்களின் முட்டாள் தனத்திற்கு இனியும் ஒரு புதிய உதாரணம் தேடப் புறப்பட்டுவிட்டாற்போல இருக்கின்றதே தவிர இதற்குவேறு என்ன காரணம் சொல்லமுடியும்.

நிற்க திரு. வெங்கட்டரமண அய்யங்கார் இப்போது யாருக்கு எதிராக நிற்கின்றார் என்று பார்ப்போமானால் அதுவும் ஒரு பெரிய அதிசயமாகவேதான் கருதக்கூடியதாகும். அதாவது "மர்ச்சென்ட் பிரின்ஸ்" என்று சொல்லத்தக்கவரான இந்தியவர்த்தக முடிசூடா மன்னரும் தென்னிந்திய வர்த்தக சங்கத்தலைவரும் கோடீஸ்வரரும் வருஷம் 75000 ரூபாய் வருமானவரி செலுத்துபவரும் மேல்நாடுகளில் லண்டன் முதலிய இடங்களில் வர்த்தகக் கிளை உடையவரும் இங்கிலாந்து; ஜர்மனி, ஜப்பான், அமெரிக்காமுதலிய இடங்களுக்கு வர்த்தக சுற்றுப்பிரயாணம் செய்தவரும் நாணய மாற்று விஷயத்தில் அனுபவஞானமுள்ளநிபுணரும்தென்இந்தியாவின் முக்கிய பட்டணங்களிலெல்லாம் வர்த்தகக்கிளை உள்ளவருமான ஜனாப் எம். ஜமால் முகம்மது சாயபு அவர்களுக்கு எதிரிடையாகவும் போட்டியாகவும் நிற்கின்றார் என்றால் திரு. அய்யங்கார் அவர்களின் வர்த்தக அபிமானம் எவ்வளவு என்பதற்கு வேறு சாட்சியம் வேண்டியதில்லை.

தவிர அய்யங்காரின் வியாபார அனுபவம் எவ்வளவு என்று பார்ப்போமானால் கோயமுத்தூரில் மால்மில் என்பதாக ஒரு செசவு மில் ஏற்படுத்தி அதைத்தாமே நடத்துவதாக 'அதற்கு ஏராளமாக பங்கும் வசூல் செய்து மில் நடத்தத் தெரியாமல் நஷ்டமடைந்து பிறகு தம்மால் முடியாமல் ஒரு வெள்ளைக்கார கம்பெனியாரிடம் நிர்வாகத்தைஒப்புவித்து மில்லுக்கும் பங்குக்காரர்களுக்கும் மத்தியில் வெள்ளைக்கார கம்பெனிக்கு ஒரு லாபமும் தமக்கு ஒரு லாபமும் ஏற்பாடுசெய்துகொண்டு பங்குக்காரர்கள் தக்கபடி லாபமடைய முடியாமல் கஷ்டப்பட்டுவரச் செய்யத்தக்க வியாபார அறிவுள்ளவராவார்,

மற்றபடி அய்யங்கார் ஏன் காங்கிரசின் பேரால் நிற்கவில்லை என்று பார்ப்போமானால், சில சமயத்தில் இந்திய சட்ட சபையில் காங்கிரசுக் கட்சி சமுதாயச்சீர்திருத்தங்களில் தலையிட்டு விட்டால் அதற்கு எதிரிடையாக வேலை செய்வதற்கென்றே தம் சொந்தப்பொறுப்பில் நிற்க வேண்டியிருக்கின்றதாகும். ஜனாப் ஜமால் மகம்மதுமேல்கண்டபடி பெரிய வியாபாரி, பிரபு, வியாபார அனுபவமும் தர்ம சிந்தையும் உள்ளவர் என்பதோடல்லாமல் 'சுதேசமித்திரன்' என்னும் பார்ப்பனமித்திரன் பத்திரிகை லிமிடெட்டில் ஒரு டைரெக்டராக இருந்தும், திரு. வெங்கிட்டராமணய்யங்கார் அவர்கள் அப்பத்திரிகைக்குள்ள ஓட்டர் பாத்தியதையை கொண்டு நிற்பதற்கு அப்பத்திரிகை நிர்வாகஸ்தர்கள் சிபார்சு செய்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. சென்னைமாகாண வியாபாரத் தொகுதிக்கு ஜனாப் ஜமால் முகமது அவர்கள் நிற்பது தெரிந்தும் அவருடைய தகுதியை அறிந்தும் அவரை ஒரு

டைசெட்டாரகக் கொண்டிருக்கும் சுதேசமித்திரன் பத்திரிகை திரு. சி. வி. வெங்கிடரமணய்யங்காரை அத்தொகுதிக்கு அனுமதித்திருப்பதையும் அவரையே விளம்பரப் படுத்துவதையும் பார்த்த பிறகு மித்திரனின் வர்த்தக அனுதாபமும் பொதுநலத் தன்மையும் எவ்வளவு என்பதற்கு அளவுதேட வேறு எங்கும் போகவேண்டியதில்லை என்றே சொல்லுவோம்.

எனவே சென்னை மாகாணத்தில் உள்ள பெரியோர்கள், சிறப்பாக பார்ப்பனரல்லாத வியாபார ஓட்டர்கள் தங்கள் கடமையையும் வியாபார அபிவிருத்தியையும் பார்ப்பனரல்லாத மக்களின் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் உத்தேசித்து இந்திய சட்டசபைக்கு இனிமேலாவது ஒரு பார்ப்பனரை அதுவும் ஒரு வருணாசிரம அய்யங்காரை அனுப்பாமல் இருக்கச் செய்யவேண்டுமாய் தெரிவித்துக்கொள்ளுகின்றோம், ஒரு சமயம் அய்யங்கார் எப்படியாவது சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றாலும் பெறலாம். அல்லது அவரது சூழ்ச்சி செல்லுபடியாகாமல் உட்கார்ந்தாலும் உட்காரலாம். ஆனால் உண்மைப் பார்ப்பனரல்லாதார் இவ்விஷயத்தில் கண்டிப்பாய் அவரவர்கள் கடமையைச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

---

(9ம் பக்கத் தொடர்ச்சி.)

சன், அவர்களுக்கு இம்மாதிரி காரியங்களில் எவ்வளவோ அனுபோகம் உண்டு. ஆதலால் அவர்களை நாம் நம்பித்தான் ஆகவேண்டும், வேறு கதியில்லை. நிற்க இதைத்தவிர வேறு மார்க்கம் இல்லை என்று கருதித்தான் முன்னமேயே மிஸ்டர் கல்யாணசுந்தர முதலியாரைப் பிடித்து "ஆஸ்திக சங்கம்" என்று ஒன்றுஏற்படுத்தி அதற்கு நமது பழைய ஆசாமிகளையே அதாவது மெஸ்லர்ஸ் ஜயவேலு, குழந்தை, பாவலர், ஷாபி மகமது சாயபு முதலிய ஆசாமிகளையும் மற்றும் சில புதிய நபர்களையும் சேர்த்துவிட்டு வேலையும் துவக்கிவிட்டது. இதை அனுசரித்து சட்டசபையிலும் சரமாரியாக கேள்விகளும் கேட்டாய்விட்டது. ஆதலால் இதுதான் சரியான மார்க்கமாகும். நாமும் இனிமேல் மின் சக்தி அதாவது சுயராஜ்யம் பூரணசுயேச்சை ஆகிய பேச்சுகளைப் பேசாமல் மதம் போச்சு கடவுள் போச்சு என்று கத்தவேண்டியதுதான். அதற்கேற்றபடி தேவாரம், திருவாசகம் ஆகியவைகளிலும் சில பாட்டுகள் பாடம்செய்து கொண்டேன். தாங்களும் சீக்கிரத்தில் சில பாட்டுகள் பாடம் செய்துகொள்ளுங்கள். மீட்டிங்கில் இவைகளைச் சொல்லிக் கண்களில் நீர் வடியவைத்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டுதான் இனி பிரசங்கம் செய்யவேண்டும். ஆதலால் தயவுசெய்து மனதைவிடாமல் தைரியமாயிருங்கள்.

வா—என்னவோ அப்பா இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. அப்துல்காதர் சாயபுக்கும் ஆடி அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று தாங்கள் கவனிக்கமாட்டீர்களா? சுயமரியாதை இயக்கத்திற்கும் சட்டசபை தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் ஏற்படும்? எப்படி ஆனாலும் சரி அதையும் பார்த்து விடுவோம். அந்த ஆசாமிகள் வந்தார்களா?

மு—இராத்திரிக்கு வருகிறார்களாம்.

வா—ஏன் இப்பொழுது வருவதற்கென்ன?

மு—வீதியில் யாராவது பார்த்துக்கொள்வார்களாம். ஆதலால் இராத்திரி முக்காடு போட்டுக்கொண்டு வருவார்கள்.

வா—சரி அவர்கள் வரும்போது நீயும் வா பேசலாம்.

மு—ஆகட்டும் போய்வருகிறேன்.

## ஒரு மறுப்பு.

17—3—29 ௳ "குடி அரசு" இதழ் 17-வது பக்கத்தில் "அபிவிருத்தி மந்திரியின் பங்களா புதூர் விஜயம்" என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமான் தாசப்பகவுண்டரவர்களால் நடத்தப்பட்டு வரும் ஆஸ்பத்திரி" என்று பொது ஜன ஊழியன் எழுதியது தவறு என்றும் ஸ்ரீமான் தாசப்பகவுண்டரவர்கள் ஆஸ்பத்திரிக்காக கட்டிடம் வாடகை இல்லாமல் கொடுத்திருக்கிறாரே யொழிய அவரால் ஆஸ்பத்திரி நடத்தப்படவில்லை என்றும் தாலூக்கா போர்டாரால் பரிபாலிக்கப்படுகிறதென்றும் கோபி தாலூக்கா போர்டு தலைவர் அறிவிக்கிறார்.

## பொங்கலூர் பழைய மாணவர் சங்கம் 3வது ஆண்டு நிறைவு விழா

நிகழும் 1929-௵ ஏப்ரல் மாதம் 23-ந் தேதி செவ்வாய்க் கிழமை 2-மணிக்கு ஷை சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் திருவாளர் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் B. A. B. L, M. L. A. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

அவ்வமயம் ஈரோடு திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியார் சுயமரியாதையும் அதன் இயக்கமும் என்னும் விஷயத்தை உபந்நியசிப்பார், என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

## வேலூரில் சுயமரியாதை இயக்கம்

சென்ற 14-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6-30 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் சுயமரியாதை இயக்கத்தின் சிறந்த கூட்டம் முனிசிபல் சேர்மன் வி. எஸ். பத்மநாப முதலியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஊரிஸ் காலேஜ் தமிழ் பண்டிதர் திரு. வேணுகோபால் நாயக்கர் அவர்கள் சமூக முன்னேற்றம் என்பதைப் பற்றியும், "தமிழன்" பத்திராசிரியர் திரு. ஜி. அப்பாதுரையவர்கள் சமயங்களும் சுயமரியாதையுமென்பதைப்பற்றியும் வேதக் கலாசாலையைச் சேர்ந்த திரு. எம். கே. மத்தேயு அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் மாட்சிமையைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். என். வி. மாசிலாமணி அவர்கள் சபையோருக்கு வந்தனம் கூறியபின் சபை முடிவுற்றது என்று திரு. ஆர். எஸ். சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

## பட்டிவீரன் பட்டியில் நாடார் மகாஜன சங்க கவுன்சில் கூட்டம்.

விபவ வருஷம் பங்குனி மாதம் 21-ந் தேதி (3—4—29) புதன் கிழமை மாலை 7 மணிக்கு சங்கம் ஹாலில் நாடார் மகாஜன சங்கம் வைஸ்பிரசிடெண்டு விருதுநகர் ஸ்ரீமான் மு. சி. பெ. செந்திக்குமார நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் நடைபெற்றது. 18 கவுன்சில் அங்கத்தினர் ஆஜராயிருந்தனர், 1928-௵ ஏப்ரல் ௴ 1-௳ முதல் 1929 ௵ மார்ச்சு மாதம் 31 தேதியோடு முடிய சங்கம் வரவு செலவு கணக்குகளைக் குறித்தும் வேலைகளைக் குறித்தும் காரியதரிசிகளின் ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

1928—29-ம் வருஷத்திய வரவு செலவு கணக்குகளை பரிசோதனை செய்ய ஆடிட்டர்களாக இருவர்கள் நியமிக்கப்பட்டனர்.

1929 வருஷம் ஏப்ரல் மாதம் 29, 30 மே மாதம் 1 தேதிகளில் பொறையாற்றில் நடைபெறும் 13-வது கான்பரன்சுக்கு வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாக 6 கனவான்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஷை கான்பரன்சுக்கு திருவாளர் வி. கனகசபை நாடார் அவர்களைத் தலைவராக வைத்து 45 அங்கத்தினர் அடங்கிய விஷயாலோசனைக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

தல் புதுக் [illegible] கனவான்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள இக்கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கலாமென்றும், கான்பரன்ஸை பொறையாற்றில் 1929 வருஷம் ஏப்ரல் மாதம் 29, 30 மே மாதம் 1 தேதிகளில் நடத்தலாமென்றும், சங்கத்தின் 105 வது சட்டப்பிரகாரம் கான்பரன்ஸ் டிக்கெட்டுகள் கிரயத்திற்கு விற்கப்படவேண்டுமென்றும், 12 வது கான்பரன்ஸ் வரவு செலவு கணக்கை அனுப்பும்படி ஜெனரல் செக்ரடரி ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமென்றும், சங்கத்திலிருந்து நடத்திவரும் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் 2 வது லாட்டரியின் டிக்கெட்டுகளை விசேஷ விற்பனை செய்ய மறுபடியும் லாட்டரி கமிட்டியார்களை கேட்டுக்கொள்ளுகிறது என்றும், கோவில்பட்டி தாலூக்கா மேல்மாந்தை ஜமீன், வேம்பார் ஸ்ரீமான் ஆர். தலையாணிமுத்து நாடார் வகையறா அவர்கள் எழுதிய மனு விஷயங்களை விசாரித்து கவுன்சிலுக்கு அறிக்கை செய்ய திரு. பா. ம. பாண்டிய நாடார் முதலிய 4 கனவான்களைக் கேட்டுக் கொள்வதாயும் பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஏ. வி. ஷண்முக நாடார் அவர்கள் எழுதிய விண்ணப்ப விஷயம் காரியதரிசிகள் அபிப்பிராயப்படி செய்துகொள்ள அனுமதிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று திரு. எம். எஸ். பி. செந்திக்குமார நாடார் அறிவிக்கிறார்.

## மக்கள் ஒழுக்கத்திற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்?

## ஈரோடு ஆலயப் பிரவேச வழக்கு விபரம்

### FIRST INFORMATION REPORT.

First Information of a cognizable crime reported under section 154, C. P. C. at Police Station, Erode.

Circle G. District Coimbatore.

No, 36/29 Date and hour of occurance 4-4-29- ௳ ராத்திரி 7மணிக்கு.

Date and hour when reported 6-4-29 9-45 P. M.

Place of occurance & distance & direction from Police Station:—ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவில மேற்கு 4 பர்லாங்கு.

Date of despatch from Police Station:— 6—4—29.

1. Name and residence of informent and complainant:— ஈரோடு வெங்கிட்ட நாயக்கன் மகன் முத்து நாயக்கன்.

2. Name & residence of accused: ஈஸ்வரன் 1, கிருஷ்ணம்பாளையம் கருப்பன் 2, மஞ்சமேட்டான் மகன் பசுபதி 3 இன்னும் அடையாளம் தெரிந்த (பேர் தெரியாத) சுமார் 10 பேர்கள்

3. Brief description of offence, with section and details of property carried off, if any:—Section 297 I,P.C. 2வது கலத்தில்கண்ட நபர்கள், ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவில் மண்டபத்திற்கு முன் துவாரபாலகர் மண்டபத்திற்குள் அக்கிரமமாக பிரவேசித்தும் ௸ அர்ச்சகர்களை "உள் கதவை திறந்து விடுங்கள் நாங்களே ஸ்வாமிக்கு பூஜை செய்யவேண்டு" மென்று கேட்டதாகவும் இச்செய்கையானது மாமூலுக்கு விரோதமாகவும் பஞ்சமர்கள் அல்லாதவர்களுடைய மதக்கொள்கைக்கு விரோதமாகவும் பங்கப்படுத்த ப்ரயத்னப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் வாதியால் ஸ்டேஷனில் தாவா

(Sd) Not legible.
S, I.

Muthu Naicken Son of Venkitarama Naicken of Erode appeared at the station at 9-45 p. m. on 6-4-29 & presented a complaint which runs as under:....

ஈரோடு டவுன் கச்சேரி வீதியிலிருக்கும் வெங்கட்ராம நாயக்கன் குமாரன் முத்து நாயக்கன் என்பவர் ஈரோடு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முன்பாக எழுதிவைத்த பிராது.

நான் ஈரோடு டவுன் கோட்டையிலிருக்கும் ஈஸ்வரன் கோவில் தர்மகர்த்தாவாகச் சென்ற இருபது வருஷகாலமாக இருந்து வருகிறேன். நான் ஊத்துக்குளிக்கு என சொந்தக்காரியமாக 7,8 நாட்களுக்கு முன் போய்விட்டு இன்றைய தினம் திரும்பி ஈரோட்டுக்கு வந்தேன். ௸ ஈஸ்வரன் கோவில் பூஜைசெய்யும் சேனாதிபதி குருக்கள் மகன் முத்துச்சாமிக் குருக்கள் 1 மாணிக்கக் குருக்கள் மகன் தாத்தாத்திரி குருக்கள் 2 இவர்கள் என்னிடம் வந்து சென்ற வியாழக்கிழமை ராத்திரி சுமார் 7 மணிக்கு வழக்கப் பிரகாரம் பூஜை செய்துவிட்டு துவார பாலகர்கள் இருக்கும் மண்டபக் கதவைப் பூட்டியதும் ௸ மண்டபத்திற்குள் ஈஸ்வரன் 1 பஞ்சமர்கள் கிருஷ்ணன்பாளையம் கருப்பன் 2. மஞ்சமேட்டான் மகன் பசுபதி 3. இன்னும் அடையாளம் தெரிந்து பேர் தெரியாத சுமார் 10 பேர் வரையில் அத்துமீறி அக்கிரமமாக துவாரபாலகர்கள் மண்டபத்தில் பிரவேசித்து மேற்படி அர்ச்சகர்களை உள் கதவைத் திறந்து விடுங்கள் நாங்களே ஸ்வாமிக்குப் பூஜை செய்ய வேண்டுமென்று கேட்டதாகவும் இச் செய்கை மாமூலுக்கு விரோதமாகவும் பஞ்சமர்கள் அலலாதவர்களுடைய மதக்கொள்கைக்கு விரோதமாகவும் இருந்தபடியால் மேற்படி அர்ச்சகர்கள் பயந்து கொண்டு வந்துவிட்டதாகவும், அதுமுதற்கொண்டு தினந்தோறும் மேற்படி எதிரிகளும் அவர்களுடைய கூட்டத்தாரும் மேற்படி கோவிலுக்குள் அக்கிரமமாகப் பிரவேசித்து எங்களுடையவும் மேற்படி குருக்களுடையவும் மதக்கொள்கைகளைப் பங்கப்படுத்த பிரயத்தனப் பட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. பஞ்சமர்கள் மேற்படி கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது அவர்கள் கருடகம்பத்தண்டையிலிருந்துதான் ஸ்வாமியை வணங்கிப் போவது வழக்கம். இச் செய்கையை பெருமாள் கோவில் வீதி அங்கப்ப முதலி 1, பழனியப்ப முதலி 2. கோவில் திருவிளக்குக்காரன் குட்டமேனன் 3 புரோகிதம் பொன்னுசாமி அய்யங்கார் 4. நாராயணன் செட்டி என்கின்ற அங்கான் செட்டி 5 வேலப்ப முதலியார் மகன் சதாசிவமுதலியார் 6. வேலப்ப முதலியார் 7. இன்னும் சிலரும் அறிவார்கள். இது விஷயமாய் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தை தேவஸ்தானம் கமிட்டி பிரசிடெண்டு அவர்களுக்கும் இன்றையதினம் தெரியப்படுத்தியிருக்கிறேன். படிக்கக் கேட்டேன் சரி.

ஒப்பம் வெ. முத்துநாயக்கர், 6—4—29

(Sd) not legible S. I.
6—4—29

(True copy) Bo.
(Sd),.............
Head Clerk.

### சார்ஜ் ஷீட்டு

ஜில்லா—கோயமுத்தூர்
நம்பர்:—17 A. 29.
தாக்கல் தேதி:—18-4-29
போலீஸ் ஸ்டேஷன்:—ஈரோடு.
முதல் தகவல் நம்பர்:—36 of 29
தேதி 6-4-29

1. பிராது கொடுப்போர் அல்லது முதலில் அறிவிப்போரின் பெயரும் விலாசமும் தொழிலும்:—சக்கிரவர்த்தி

2. குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயரும் விலாசமும், வைத்து செய்யப்பட்டார்களா இல்லையா? தலைமறைவாக எவரேனும் உண்டா:—இல்லை. பாதுகாவல் உண்டா: இல்லை. ஜாமினில் அல்லது அடையாளம் கண்டுகொள்ளத்தக்கவை:—

1, ஈரோடு கச்சேரி வீதி முத்துக்கருப்பண பிள்ளை குமாரன் ஈஸ்வரன்.

2. ஈரோடு மஞ்சை மேட்டான் என்கிற முத்துசாமி குமாரன் பசுபதி, தலையாரி.

3, ஈரோடு கிருஷ்ணம்பாளையம் கயிலன் குமாரன் கருப்பன்—ஆதிதிராவிடன்.

4, யாராலாவது எப்பொழுதாவது இது சம்மந்தமாக ஏதேனும் தடையங்கள் ஆயுதங்கள் உட்பட கண்டுபிடிக்கப்பட்டு மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றனவா?—இல்லை.

5. சாக்ஷிகளின் விலாசமும் விபரமும்.

1. ஈரோடு வெங்கிட்டராம நாயக்கர் குமாரர் முத்து நாயக்கர்.

2, ஈரோடு மாணிக்க குருக்கள் குமாரர் தாத்ததரி குருக்கள்

3, ஈரோடு சேனாதிபதி குருக்கள் குமாரர் முத்துசாமி குருக்கள்.

4, ஈரோடு கொழுந்தை முதலி குமாரர் அங்கப்ப முதலி.

5. ஈரோடு ஆறுமுக முதலி குமாரர் பழனியப்ப முதலி.

6. அப்புமீனன் மகன் குட்டமீனன்.

7. ஈரோடு போலீஸ் ஹெட்கான்ஸ்டேபிள் 931 பாலகிருஷ்ணன்.

7. குற்றம் அல்லது அறிவிப்பு: குற்றத்தின் பெயரும் காலமும் சுருக்கமாகத் தெரிவிப்பதுடன் இந்தியன் பினல் கோட் எந்தசெக்ஷன்களின் கீழ் என்பது.

295, 297, 109.

சென்ற 4-4-29௳ சுமார் 7மணிக்குமுதல் குற்றவாளி, இரண்டாவது, மூன்றாவது, குற்றவாளிகளையும், இதர ஆதித்திராவிடர்களையும் வழக்கத்திற்கு விரோதமாய் ஈரோடு ஈஸ்வரன் கோவிலில் அக்கிரமமாய் பிரவேசிக்கத் தூண்டியும் அதன்படியே முதல் குற்றவாளி முதல் மூன்றும் குற்றவாளி வரையில் மேற்சொன்ன கோயிலில் அக்கிரமமாய் பிரவேசித்து ஜாதி ஹிந்துக்களின் மதத்தை அவமானப்படுத்த அங்கு உள்ள விக்கிரகங்களை (நவக்கிரகங்களை) தீட்டாக்கியதாகவும் அப்படிச் செய்வது ஜாதி ஹிந்துக்களின் மத உணர்ச்சியை அவமதிப்பதாகுமென்பது தெரிந்தும் செய்ததாகவும் உள்ள குற்றங்களை செய்ததாக.

Not legible S. I. (18-4-29)
(True copy)
Bo
(Sd).......................
H. Clerk.

### ஏஜண்டு தேவை,

திருவாரூரில் நமது 'குடி அரசு' 'ரிவோல்ட்' பத்திரிகைகளை விற்பனை செய்ய ஒரு ஏஜண்டு தேவை. விபரங்களுக்கு எழுதுக

மானேஜர்,
'குடி அரசு' ஈரோடு.

## கவனிப்பு.

ஈரோட்டிலிருந்து "தமிழரசு" என்னும் பெயருடன் நமது சம்மதத்தின்பேரில் ஒரு பத்திரிகை நடத்துவதாகச் சொல்லி யாரோ விளம்பரத்துக்கென்றும் சந்தாவுக்கென்றும் பணம் வசூல்செய்து வருவதாகச் சில வியாபாரிகளின் கடிதத்தால் தெரியவருகிறது, சிலர் பணம் அனுப்பிவிட்டு நமக்கு எழுதியிருக்கிறார்கள். ஷை பெயருடன் இவ்விடம் நமது ஆதரவிலோ அல்லது தனியாகவோ யாதொரு பத்திரிகையும் வெளிப்படுத்தப் படவில்லையென்றும் அப் பெயர்கொண்ட பத்திரிகைக்கும் நமக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லையென்றும் அதற்கு யாராவது தொகை செலுத்தினால் அதற்கு நாம் எவ்விதத்திலும் பொறுப்பாளி யல்லவென்றும் பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர், 'குடி அரசு'

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நிற்க, குழந்தைப்பருவத்தில் கலியாணம் செய்வித்து வயதடையுமுன்னரே விதவையாகும்பெண்களை அவர்கள் ஆயுள்நாள் முழுதும் மாறாத் துயரத்திற்குள்ளாக்குகிறார்கள். ஆனால் ஒரு மனைவியிறந்து போனாலோ அவள் கணவன் அவள் இறந்த அன்றே மறு விவாகத்திற்கு வேண்டியவற்பாடுகள் செய்ய முயற்சிகிறான். அன்றியும் ஒருபெண் சுமங்கிலியாயிருக்கிற காலத்திலே அஷ்டஐஸ்வரியவதியாயிருந்த போதிலுங்கூட விதவையாகவிட்ட மாத்திரத்திலேயே எல்லா சுபாசுபகாரியங்களிலும் கலந்துகொள்ள முடியாத ஒதுக்கப்பட்ட நிலையை யடைகிறாள். இந்நிலைமைகள் மாறினாலொழிய சமூகம் முன்னேற்றமடைய முடியவே முடியாது.

### ஆலயப்பிரவேசம்.

கூடிய சீக்கிரத்தில் ஆலயப்பிரவேசம் என்பது இந்து மதத்தில் மிக முக்கியமான ஒரு பிரச்னையாகும். எல்லா வகுப்பாரும் நம்முடைய தேவாலயங்களுக்குள்ளே போக அனுமதிக்கப்படவேண்டுமென்பது கூடிய சீக்கிரம் கைகூடவேண்டிய ஒரு விஷயம். சில வகுப்பார்மட்டும் கோவிலுக்குள் போகக்கூடாது என்னும் கட்டுப்பாடு நம் சமூகத்தையே பாழ்படுத்திக்கொண்டிருக்கிறது. இதைச்சொன்னால் நாஸ்திகப்பட்டம் வந்துவிடுகிறது. ஆனால் நாஸ்திகம் இந்து மதத்தின் ஒரு பகுதியாகும். (சேனுங்கள்) சுயமரியாதைக்காரர்கள் கோவில்களிலுள்ள ஆபாசங்களை யொழிக்கவேண்டுமென்றே கூறுகிறார்கள். திரு. காந்தி அவர்கள் கோவில்கள் நமது நாட்டில் விபசாரிகளின் இல்லங்களாக விளங்குகின்றன என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவு கடுமையாக அவர் சொல்லவேண்டிய அவசியமென்னவென்று பார்த்தால் கோவில்களைச் சீர்திருத்துவது முடியாத காரியம் என்பதைச் செவ்வையாக உணர்ந்தேதான் சொன்னார் எனத் தெரிகிறது. ஏன், சென்னை இந்துமத தர்ம பரிபாலனச் சட்டம் போன்றுள்ள பல புதிய சட்டங்களால் கோவில்களைச் சீர்திருத்திவிடலாமென்று நினைக்கிறேன்.

## மகமதிய வாலிபர்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சி.

வங்காள மாணவர்கள் தங்கள் சமூகத்திலும் புரோகிதக் கொடுமை இருப்பதையும், அதனால் தங்கள் சமூக முன்னேற்றமும் சுயமரியாதை உணர்ச்சியும் தடைபட்டுவருவதையும் உணர்ந்து முல்லா வர்க்கத்தையே அதாவது இப்பொழுது உள்ள புரோகித வர்க்கத்தையே அடியோடு ஒழிக்க வேண்டுமென்கின்ற எண்ணத்துடன் சமூக முன்னேற்றத்திற்கு அனுகூலமான சட்டங்களியற்றுவதற்கு எதிரிடையாயிருக்கும் எல்லா முல்லா வர்க்கத்தையும் ஒழிப்பதற்கு என்று புரோகித விலக்கு சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். சென்ற வருஷத்திலும் வங்காளம், பம்பாய் மத்திய மாகாணம் முதலிய இடங்களில் உள்ள வாலிபர்கள் இம்மாதிரியாக ஒரு கிளர்ச்சி செய்தது ஞாபகமிருக்கலாம். எனவே எந்த முற்போக்குக்கிளர்ச்சிகளும் அவசியம் என்பது முதலில்வாலிபருக்குத்தான் படும் என்பதும், அவர்கள்தான இம்மாதிரி சமூகத்திற்குள் நுழைந்து அழுகி நாறிப்போன பழைய பழக்க வழக்கங்களை தக்க தியாகத்தை கைம்மாறாகக்கொடுத்து ஒழிக்க சக்தியுடையவர்களாயிருப்பார்கள் என்பதும் நமது அபிப்பிராயமாகும். ஆதலால் நமது நாட்டு வாலிபர்களும் உலகமெல்லாம் கண்விழித்துக்கொண்டிருக்கும் இந்த சமயத்தை கைவிட்டுவிடாமல் முனைந்து நிற்பார்கள் என்று நம்புகின்றோம்.

### இராசிபுரம் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

1929 ௵ ஏப்ரல் மாதம் 22 தேதி திங்கட்கிழமையில் இராசிபுரம் சேணியர் வேலாயுதசாமி கோயில் நந்தவனத்தில் அமைக்கப்பட்டிருக்கும் டாகைகல் மண்டபத்தில் திருவாளர் ஈ. வெ. இராமசாமிப் பெரியார் அவர்களின் அக்கிராசனத் தலைமையில் இப் மகாநாடு நடைபெறும்.

நமது சென்னை மாகாண சுகாதார மந்திரி கனம் எஸ், முத்தையா முதலியார் பி, ஏ. பி. எல். எம். எல், சி. அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார். அது காலை திருவாளர்கள் ஜே. என். கண்ணப்பர் சொ. முருகப்ப செட்டியார், கைவல்யசாமியார் என், தண்டபாணி, கி. ஆ. பே. விஸ்வநாதம் அ. பொன்னம்பலனார் எஸ். வி. லிங்கம் முதலிய பல சுயமரியாதைப் பெரியோர்கள் விஜயம் செய்வார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

### சொக்கம்பாளையம் சத்வித்யா பயிற்சியாளர் சங்கம்.

ஷை சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா, உதகமண்டலம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தலைவர் பூஜித ஸ்ரீ ஸ்வாமி சித்பவானந்தாஜீ அவர்களின் தலைமையின்கீழ் சொக்கம்பாளையத்தில் சுக்கில ௵ சித்திரை ௴ 10 11-ந் தேதிகளாகிய திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் (22-4-29) (23-4-29) சிறப்பாகக் கொண்டாடப்படும் என்று சங்கத்தலைவர் அறிவிக்கிறார்.


## வியாபாரச் செய்தி.

—o—

விரலிமஞ்சள் 1050 ரூபாய் எடைகொண்டது மணு 10-க்கு ரூ 31—8—0 கிழங்கு மஞ்சள் ரூ 29.

கடலை எண்ணெய் டின்னுடன்
38 ராத்தல் ரூ. 6—12—0
நல்லெண்ணை பொதி 1-க்கு „ 80— 0—0
எள்ளு 56 படி கொண்ட
மூட்டை 1-க்கு „ 17— 0—0
துவரம் பருப்பு 56 படி கொண்ட
மூட்டை 1-க்கு „ 20— 0—0
பனைவெல்லம் பாரம் 1-க்கு „ 25— 0—0

நாங்கள் அநேக வியாபாரிகளுக்கும் ஸ்டோர்களுக்கும் பல வருடங்களாக உயர்ந்த சரக்குகள் சப்ளை செய்து வருகிறோம். 100-க்கு 25 வீதம் அட்வான்ஸுடன் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு 100-க்கு ஒரு ரூபாய் வீதம் கமிஷனுக்கு சரக்குகள் வால்யூ வி. பி. யில் அனுப்பப்படும்,

ரு. அ. சுப்ரமணிய செட்டியார்,
கமிஷன் வியாபாரி, ஈரோடு.

## சுயமரியாதை கீர்த்தனம்.

சித்தர்கள் பாடல், சுவாமி விவேகானந்தர், ஆப்கன் அமீர், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர், உபாக்கியானங்களுடன் 24 இனிய தமிழ்க்கீர்த்தனங்களால் நமது கொள்கையை விளக்குவது, புரோகித வரி, ருத்திரப்பட்டம் இருபாட்டுகளும் யாவராலும் பாராட்டப்படுகின்றன.

ஒரு புத்தகம் அணா 3,
9 புத்தகம் ரூபாய் 1.
50 புத்தகம் ரூபாய் 5.

A. K. GURU,
69 Barbers Bridge,
Mylapore.

இன்றே எழுதுங்கள்.

காப்பிக் குடியை ஒழிக்கும்

## றேப்பிப்பொடி

உஷ்ணத்தை மாற்றும்! உலக இன்பத்தை ஊட்டும்! கற்ப மூலிகைகளால் தயாரித்தது! காப்பி போன்ற மணமுடையது! இன்ப வாழ்க்கைக்குகந்தது! உபயோகித்ததுமே குணம். அயல் நாட்டுக்கு முன் பணம். வி. பி. வேறு. அரை டஜன் டின் ரூ. 1 3/4 டஜன் 1 க்கு ரூ. 3 1/4.

S. V. ராஜப்பா, றேப்பி பாக்டரி, பழனி.

## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு வரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க் உள்ளது ரூ1—8—0.

உடனே எழுதுங்கள்.

வாவலன் புஸ்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்,

# "பெரிய புராணம்"

## "சுந்தரமூர்த்தி சுவாமிகள்."

திருநெல்வேலி
திரு. எஸ். குற்ராலலிங்கம் எழுதுவது.
(முன் தொடர்ச்சி.)

### "தடுத் தாண்டமை."

நம்பியாரூர் திருமண தினத்தன்று தம்மைத் தாமே நன்கு அலங்கரித்துக்கொண்டு திருமணப் பந்தலில் மணமகனுக்கென அமைக்கப்பட்டிருந்த ஆசனத்திற் போய் அமர்ந்தாராம், இதைச் "சிவபெருமான்" அறிந்து, 'தாம் கைலாசத்திலே சுந்தரருக்கு வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் அவரை உலக வாழ்க்கையிலே மயங்க விடாமல் தடுத்து ஆட் கொள்ளும் பொருட்டு ஓர் வயோதிகப்பிராமணன் வடிவங் கொண்டு திருமணப்பந்தலினுட் போந்து "இவ்விடத்திலிருக்கின்ற யாவரும் நான் சொல்லும் இவ்வார்த்தையைக் கேளுங்கள்" என்று சொன்னாராம். இதைக் கேட்ட விவாகஞ் செய்யத் தொடங்கும் நம்பியாரூரரை நோக்கி, "எனக்கும் உனக்கும் ஒரு வழக்கு இருக்கின்றது. அதை முடித்துக் கொண்டு உன்னுடைய விவாகத்தை நடத்து" என்றாராம். நம்பியாரூரர் அவரைப்பார்த்து "உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு உளதாயின் அதை முடித்தன்றி நான் விவாகஞ் செய்யேன், நீர் அவ்வழக்கு இன்னதெனச் சொல்லும்" என்று கேட்க, அந்த வயோதிகப் பிராமணர் ஆண்டு குழுமியிருந்த பிராமணர்களைப் பார்த்து "இந்த நம்பியாரூரன் எனக்கு அடியவன்" என்றாராம். இதைக் கேட்ட நம்பியாரூரர் இடியோசை கேட்ட நாகம் போல் விழித்து ஐயரது வார்த்தைகளை மறுத்தாராம். மறுக்கவும் ஐயர் நம்பியாரூரரிடம் "அந்தக் காலத்திலே உன்னுடைய பாட்டன் எனக்கு எழுதித் தந்த அடிமை யோலை இதுவே. அப்படியிருக்க இந்தக் காரியத்தைக் குறித்து நீ மறுப்பதென்ன?" என்றாராம். உடனே நம்பியாரூரர் ஐயரைப் பார்த்து "பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் இன்றைக்கு நீயே சொல்லக் கேட்டோம். நீ பித்தனா? அன்றிப் பேயனா?" என்று சொல்ல, ஐயர் "நான் பித்தனானாலும் ஆகுக, பேயனானாலும் ஆகுக. நீ இப்போது எத்தனை வசைமொழிகளைச் சொன்னாய், அவைகளினால் நான் சிறிதாயினும் வெட்கம் அடையேன். நீ என்னைச் சிறிதும் அறிந்ததில்லை. இப்படி நின்று வீண் மொழிகள் பேச வேண்டாம்; அடிமைத் தொழில் செய்யவா" என கூப்பிட்டாராம். அப்பொழுது நம்பியாரூரர் "இவர் அடிமை போலே ஒன்று உண்டென்றாரே, அதன் உண்மையை அறிய வேண்டும்" என்று நினைத்து ஐயரைப்பார்த்து "ஐயரே! உம்முடைய ஓலையைக்காட்டும்" என்று சொல்ல, ஐயர் "நீ இந்த ஓலையைப் பார்த்து நிச்சயிக்கத்தக்கவனோ? நான் இந்தச் சபையாருக்கு ஓலையைக்காட்டி மெய்யென்று உறுதிப் படுத்தியபின் எனக்கு ஊழியஞ் செய்வதற்கு மாத்திரம் தக்கவன்" என்றாராம். அது கேட்ட நம்பியாரூரர் கோபங் கொண்டு அவர் கையிலிருக்கும் ஓலையைப் பறிக்கும்படி அவருக்கு எதிரே விரைந்து சென்றபோது, அவர் ஓடத் தாமும் ஓடி, அவரைப் பின்றொடர்ந்து பிடித்து ஓலையைப் பறித்து "பிராமணர்கள் அடிமையாய் ஊழியஞ் செய்தல் என்ன முறை" என்று சொல்லிக்கிழிக்க, ஐயர் சுந்தர மூர்த்தியா(நம்பியாரூரா)ரைப்பிடித்துக்கொண்டு "இது முறையோ" வென்று சத்தமிட, சமீபத்தில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி "உலகத்திலே ஒரு காலமும் நடந்திராத ஏற்பாட்டைக் கொண்டு வழக்காடுகின்ற பிராமணரே! நீர் எங்கேயிருக்கின்றவர் சொல்லும்" என்று கேட்க, ஐயர் திருவெண்ணை நல்லூரிலிருப்பதாகத் தெரிவித்ததும், இவ்வழக்கை திருவெண்ணை நல்லூரிலிருக்கின்ற பிராமணர்களை வைத்துத் தீர்த்துக் கொள்ளலாமென எல்லாரும்திருவெண்ணெய் நல்லூருக்குச்சென்றார்களாம். யாவரும் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றதும், ஐயர் அவ்வூரிலுள்ள பிராமணர்களுடைய சபைக்குச் சென்று நம்பியாரூரருக்கும் தமக்குமுள்ள வழக்கைத் அறிவித்து முறையிட்டாராம். பிராமண சபையார், பிராமணன் பிராமணருக்கு அடிமையென்ற வழக்கைக் கேட்டு வியப்புற்று வயோதிக ஐயரைப் பார்த்து "உம்முடைய விவகாரத்தை உண்மையென்று நிச்சயிப்பதற்கு அநுபவம், லிகிதம், சாட்சி என்கின்ற மூன்றும் வேண்டுமே, அம்மூன்றில் ஒன்றாயினும் நீர் காட்டும்" என்றார்களாம். உடனே ஐயர், நம்பியாரூரர் கிழித்தது நகல் ஓலை யென்றும், அதற்கு மூல ஓலை தம்மிடத்திலிருப்பதாயும், அதையும் நம்பியாரூரர் பறித்துக் கிழிக்காமல் பார்த்துக் கொள்வதாயிருந்தால் காட்டுவதாயும் கூறி உறுதி பெற்று காண்பித்தாராம். அந்த ஓலையில்

"திருநாவலூரில் இருக்கும் ஆதி சைவனாகிய ஆரூரன் என்கின்ற நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கின்ற பித்தனுக்கு நானும் எனது சந்ததியாரும் வழித்தொண்டு செய்வதற்கு, உள்ளும் புறமும் ஒப்ப உடன் பட்டு எழுதிக் கொடுத்தேன்.

இப்படிக்கு,
"ஆரூரன்"

என்று எழுதப்பட்டிருந்ததாம்.

பின்னும் அந்த ஓலையிலே சாட்சிகளாக கைச்சாத்திட்டவர்கள் தங்களுடைய கையெழுத்துக்கள் தானென்றும் ஒப்புக் கொண்டதோடு, நம்பியாரூரரது பாட்டனுடைய வேறு கையெழுத்துக்களையும் ஒத்துப் பார்த்து உண்மையான கையெழுத்துத் தானென்று தீர்மானித்து, பிராமண சபையார் 'நம்பியாரூரன் வயோதிக அய்யருக்கு அடியவன் 'தான்' என்று தீர்மானித்தார்களாம். அதோடு பிராமண சபையார் வயோதிக ஐயரைப்பார்த்து அவருடைய வீட்டையும் நிலையாயுள்ள ஆஸ்தியையும் காட்டும்படி வேண்டினார்களாம். ஐயர் அதற்கு உடன்பட்டு அவர்களைப் பின்னே அழைத்துக் கொண்டு அவ்வூரிலுள்ள ஒரு வருட்டுறையென்னும் சிவாலயத்தினுள்ளே புகுந்தாராம். அவர் பின்னே வந்தவர்கள் ஆலயத்தினுட் புகுந்த வயோதிகரைக் காணாது திகைத்து நின்றார்களாம்.

"நம்பியாரூரர் மணக்கோலம் பூண்டு ஆசனத்திலமர்ந்ததை அறிந்த சிவபெருமான் தாம்கைலாயத்திலே சுந்தரருக்கு வாக்குத் தத்தம் பண்ணிய பிரகாரம் அவரை உலக வாழ்க்கையிலே மயங்கவிடாமல் தடுத்து ஆட்கொள்ளும் பொருட்டு ஓர் வயோதிகப் பிராமணன் வடிவங்கொண்டு திருமணப்பந்தலுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. சிவபெருமான் கைலாயத்தில் வைத்து சுந்தரருக்கு வாக்குத்தத்தம் பண்ணியதாகச் சொல்லப் படுவதென்ன? சுந்தரர் "அநிந்திதை" "கமலினி" யென்னும் இரு பெண்பாலரை இச்சித்ததாயும் அதையறிந்த சிவபெருமான் அவரை நோக்கி, "அநிந்திதை" "கமலினி" என்பவர்களை நீ காதலித்ததினால் உலகத்திற்பிறந்து அவ்விருவரையும் மனைவியாகப்பெற்றுவாழ்ந்தபின்னர் ஈண்டணைக'

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கூடங்களில் உட்கார்ந்து படிக்க விடாமல் கொடுமைப் படுத்துகிறீர்கள்! தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளையும் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற சர்க்காரின் கண்டிப்பான உத்திரவு இருப்பதால் அவர்களை ஏதோ பள்ளிக்கூட ஒட்டுத் திண்ணையிலோ வாசலிலோ இருக்க நீங்கள் கஷ்டத்தோடு, அனுமதித்திருக்கிறீர்கள்.

நீங்கள் எவ்வளவு தான் கொடுமைப்படுத்திய போதிலும் அடித்தாலும் உதைத்தாலும் பேசினாலும், சக்கிலியனும் பறையனும் கஞ்சிக்கு மடிந்தாலும் அதே நிலையில் தலைமுறைக்கணக்காக வாழ்ந்து வருவதால் அதையே தமது வாழ்வின் லட்சியமெனக் கருதியும் அதைவிட மேலான நிலையைக்கனவிலும் கருதிப்பாராமலும் 'ஈனமான சாதியிற் பிறந்தோம்' இதுவே நமது கதி, என்ற தப்பான எண்ணத்தாலும் அவர்களிடம் காசு பணம், ஆள் அம்பு, காடு தோட்டம், உத்தியோகம் அதிகாரம் எதுவும் இல்லாத காரணத்தாலும் அவர்கள் சதா சர்வகாலமும் உங்களிடம் நாய்போல் விசுவாசத்துடன் இருந்து வருகிறார்கள். நீங்கள் அடிக்கும் போதெல்லாம் சக்கிலியன் உங்கள் காலில் விழுகிறான். நீங்கள் உதைக்கும் போதெல்லாம் குனிந்து கொடுக்கிறான். நீங்கள் வையும்போதெல்லாம் தனது கன்னத்தில் போட்டுக்கொள்கிறான். நீங்கள் அவன் படியைக் குறைக்கும்போதெல்லாம் அவன் தன் வயிற்றைப்பிசைந்து கண்ணீர் வடிக்கிறான். உங்கள் சாலையில் நிற்கும் எருதுகளுக்கு நீங்கள் விலை கொடுத்து வாங்கியதால் அவைகளிடம் ஒரு வேளை கடினவேலை வாங்கினும் மறுவேளை ஒய்வு கொடுத்து தேய்த்துக் குளிப்பாட்டி அள்ளி மேவ புல்லும் கொட்டையும் தவிடும் தண்ணீரும் கொடுக்கிறீர்கள். ஆனால் இவ்விலை தலையொன்றுமில்லாத எருதுகளான எருதுகளைவிட அதிகமாக உழைத்து வரும் பறையர் சக்கிலியர் ஆகிய பண்ணையாட்களை நீங்கள் எலும்புந்தோலுமாய் வைத்திருக்கிறீர்கள்; இதற்கொரு முடிவில்லையா? எல்லையில்லையா?

என்றதாயும், அதற்கு சுந்தரர், "மக்கட் பிறப்பினனுய் மயங்குங்கால் அடியேனைத் தடுத்தாள வேண்டு"மென்று வேண்டியதாயும், அதற்குச்சிவபெருமான் இணங்கியதாயும் கூறப்படும் வாக்குத் தத்தமேயாகும். சிவபெருமான் கைலாயத்தில் சுந்தரருக்கு கூறியதாகச் சொல்லப்படும் வாக்குத்தத்தமும், அந்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற் கென்று வயோதிகப் பிராமணன் வடிவமெடுத்து வந்ததாகச் சொல்லப்படுவதும் மிகவும் விரோதமாகயிருக்கிறது, எங்ஙனமெனில் சிவபெருமானே கைலாயத்தில் வைத்து சுந்தரரை உலகத்திற் பிறந்து மனைவியர்களை அடைந்து வாழ்ந்த பின்னர், கைலாயத்திற்கு வரும்படிக்கு கட்டளையிட்டதாகச் சொல்லப்படும்போது சிவபெருமான் தன்னுடைய வாக்குத் தத்தத்தை நிறை வேற்றுவதற்காக ஓர் வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு வந்தாரென்று சொல்லப்படுவது தன்னுடைய கட்டளைக்கு மாறாகவும், விரோதமாகவும் பொய்மையாகவும் காணப்படுகிறது. கடவுளென்று சொல்லப்படுகிற சிவபெருமான் உண்மைக் கடவுளாயிருந்தால் அவர் கட்டளையொன்றை இட்டுவிட்டு அதற்கு மாறாக நடந்துகொள்ள மாட்டாரென்பது உண்மைக் கடவுளிடத்து அன்புடையவர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களானுல் அவர்களுக்கு நனி விளங்கும். சைவர்கள் சிலர், கைலாயத்தில் வைத்து சிவபெருமான் சுந்தரரை உலகத்திற்போய் கட்டளையிட்டதும் சுந்தரர் மக்கட் பிறப்பினனுய் மயங்கி "அடியேனை தடுத்தாளவேண்டும்" என்று வேண்டியதற்கு சிவபெருமான் இணங்கியபடியே, சுந்தரரை விவாகத்தினின்றும் தடுத்தாளுவதற்காகவே, சிவபெருமான் வயோதிகப் பிராமணன் வடிவங்கொண்டு வந்தாரென்று சொல்லி நாம் சொல்லுவதை மறுக்கலாம். அவர்களுக்கும் ஈண்டு சமாதானத்தைக் கொடுத்து விடுகிறோம்.

நண்பர்களே! சுந்தரரை உலகத்திற்போய்ப் பிறக்கும்படி சிவபெருமான் உத்திரவிட்டது எதற்காக? சுந்தரர் இருபெண் பாலரை இச்சித்ததமைக்கன்றோ? அங்ஙனமிருப்ப சிவபெருமான்சுந்தரர்வேண்டியதற்குத் தடுத்தாளுவதாய் வாக்குறுதி செய்து அதன்படி பிராமண வடிவமெடுத்து வந்ததாகச் சொல்லப்படுவது சிவபெருமானுடைய மதியின்மையைக் காட்டுகின்றதேயன்றி வேறல்ல, சிவபெருமான், சுந்திரர் விவாகஞ் செய்யப் புகுந்தமையை மயக்கமெனக்கருதியதாகத் தெரிகிறது. சிவபெருமான் தான் உமாதேவியாரென்னும்ஒருபெண்ணை விவாகஞ்செய்து கொண்டு வாழ்வதைமயக்கமெனக் கருதாமல் சுந்தரர் விவாகஞ் செய்யப் புகுந்தமையை மயக்கமெனக் கருதி அதைத் தடுத்தாளப் புறப்பட்டமையை மடத்தனமென்று நினைக்காமல் அறிவுடையோர்வேறென்ன நினைக்க முடியும்? இங்ஙனம் பொய்மையும், மதியின்மையும் மடத்தன்மையும் நிறைந்த பெரிய புராணத்தை அறிவுடையோர் எங்ஙனம் ஏற்றிப்போற்ற முடியும்?

வயோதிகப் பிராமண வடிவமெடுத்துச் சென்ற சிவபெருமான நம்பியாரூரைப் பார்த்து 'நம்பியாரூரன எனக்கு அடியவன்' என்று கூறியதாயும், அதற்கு மண மகனுகிய நம்பியாரூரன் மறுத்ததும், சிவ பெருமான் (வயோதிகப்பிராமணன்) தன்னுடைய வாதத்திற்குச் சான்றாக 'உன்னுடைய பாட்டன் எனக்கு எழுதித்தந்த அடிமையோலை இதோ என்று ஓர் ஓலையை யெடுத்துக்காட்டியதாயும் கூறப்படுகிறது. இங்ஙனம் சிவபெருமான் பெரியதோர் பொய்யைக் கூறி நம்பியாரூரை ஏமாற்றத்தில் வீழ்த்த வேண்டுமென்று கொண்ட கெட்ட எண்ணமே சிவபெருமானுடைய யோக்கியதையையும் அதைத்தாங்கிநிற்கும்பெரியபுராணத்தினுடைய பெருமையையுங் காட்டுகிறது.

உண்மையில் நம்பியாரூரரது பாட்டனர், அதாவது நம்பியாருரரது தகப்பனுராகிய சடையனுரென்று சொல்லப்படுகிற சிவாச்சாரியாருடைய தகப்பனர் சிவ பெருமானுகிய வயோதிகப் பிராமணன் காட்டிய அடிமை யோலையையெழுதிக்கொடுத்தா ரென்பதற்கு யாதொரு விதமான அகச் சான்றோ புறச்சான்றோ பெரிய புராணத்திலோ அல்லது வேறு இடங்களிலோ காணக்கிடக்கின்றேமன்று. ஆகையாற்றான் சிவபெருமான் பெரியதோர் பொய்யைக்கூறி நம்பியாரூரை ஏமாற்றத்தில் வீழ்த்தவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தைக் கொண்டாரென்று கூறுகின்றேம்.

அடிமையோலையை வயோதிகப் பிராமணன் நம்பியாரூரரிடம் காட்டியதும் நம்பியாரூரர் "பிராமணருக்கு பிராமணர் அடிமையாதல் இன்றைக்கு நீரே சொல்லக்கேட்டோம். நீ பித்தனே? அன்றிப் பேயனே!" எனக் கேட்டதாயும் அதற்கு வயோதிக ஐயர் "நான் பித்தனுனாலும் ஆகுக, பேயனுனாலும் ஆகுக. எத்தனை வசை மொழிகளைச் சொன்னாலும் வெட்கம் அடையேன்" என்று பதில் உரைத்ததாயும் சொல்லப்படுகிறது. இதிலிருந்து சிவ பெருமானென்னுங் கடவுள் எவ்வளவு சுயமரியாதையைக் கொண்டிருந்தாரென்பதை வாசிக்கும் அன்பர்களே அறிந்து கொள்வீர்களாக. சுயமரியாதையற்ற ஒருவரை ஒரு சிலர் கடவுளென்று சொல்லி வழிபடுதல் அறிவுடையோரும் பிறசமயத்தாரும் எள்ளி இருகை கொட்டி நகைப்பதற்கு இடமாக இருக்கின்றதன்றி வேறு என்னை? (தொடரும்.)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ழியும்வரை நமது இயக்கம் இருந்தே தீரவேண்டும்.

இம்மாதிரி தோன்றும் இயக்கங்களுக்கு இடையூறுகள் பல நேர்வது சகஜம். பிராமணியச்செருக்கால் ஆரம்பமான புத்தமதம் இந்தியாவைவிட்டுத் துறத்தப்பட்டிருக்கும் விஷயம் சரித்திரக்காரர்கள் கண்ட உண்மை. அதுபோல் நம் இயக்கத்திற்கும் பல இடையூறுகள் கிளம்பும் அவை இப்பொழுதே ஆரம்பித்து விட்டன. தேசீயத்திற்குஇடையூறுண்டு எனச்சொல்லி சிலர் நம் இயக்கத்தை அழிக்க முற்பட்டனர், ஆனுல், அசைக்க முடியவில்லை யாகையால் தற்பொழுது ஆத்திகசங்கம்என்பதின்பேரால் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனுல், இந்த ஆத்திக சங்கத்தார் சுவாமி தரிசிக்கச் செல்லும் மக்களைப் போகவிடாமல் கோவில்களை அடைத்து வைப்பவர்களைப் பற்றிக் கவனிப்பதில்லை. ஆனுல், இவர்கள் சுயமரியாதை இயக்கத்தை நாஸ்திக சங்கம் என்று கூறத் தயங்குவதில்லை. செங்கல்பட்டு நடவடிக்கைகள் நாஸ்திகமானதல்ல, அதை நாஸ்திகம் என்பவர்களே நாஸ்திகர்களாவார்கள். எல்லோரும் சமம் என்றுகூறுவது நாஸ்திகமா? பெண்களுக்குச் சமஉரிமைகொடுத்தல் வேண்டும் என்பது நாத்திகமா? கடவுளை தரிசிக்கும் முறையில் அனுவசியமாகபைசாவேனும் செலவு செய்தல்கூடாது என்பது நாஸ்திகமா? கடவுள் இவர்களிடமா துட்டுக்கேட்கிறது? அக்கடவுள்களே அவர்களுக்குப் புத்திசொல்லட்டும். மேலும், சுயமரியாதைவிரோதிகள் நம்நாட்டில் ராஜநீதியிலும் சமமான கொள்கை 5,000 வருடங்களுக்கு முன்பேயுண்டு என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனுல், இந்தக் கொள்கைகள் சாத்திரங்களில காணப்படுகின்றனவா? பிராமணன் கொலைக்குற்றம்செய்துவிட்டால், அவன் குற்றம் செய்துவிட்டான் என்று சொல்வதே அவனுக்குத் தண்டனையாய் விடும் என்றும், ஆனுல் அதேகுற்றத்தை பிராமணர் அல்லாதான் ஒருவன் செய்தால் அவனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கவேண்டும் என்று சாத்திரங்களில் காணப்படுகின்றன. இவர்கள் கூறும் சமத்துவம் அங்கு காணப்படவில்லை. ஆகையால், இத்தகைய சாத்திரங்களை நம் அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்யும் காலம் இதுவேயாகும். குற்றமிருந்தால் அதைக் கண்டனம்செய்வது நாஸ்திகமா?

கிற்க, அண்மையில் சென்னையில் நடந்த சமூக சீர்திருத்த மகாநாட்டிற்கு நான்சொல்ல முடியாமைக்கு இன்னும் வருந்திக்கொண்டிருக்கிறேன். ஆனுல், அம் மகாநாட்டிற்கு நான் எழுதியிருந்த கடிதத்தில் மற்றவர்கள் அனேக ஆண்டுகளாய்ச் செய்து முடிக்க முடியாத பலகாரியங்களை திரு. ஈ. வி. ராமசாமி அவர்கள் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் செய்து முடித்தார் என்று குறித்திருக்கிறேன். அம் மகாநாட்டில் திரு ஈ. வி. ராமசாமி அவர்கள் கூறியவை அனைத்தையும் ஒப்புக்கொள்ளுகிறேன். அதில் நான் முழு நம்பிக்கையும் உடையவனுக இருக்கிறேன். திரு. இராமசாமி அவர்கள் பிரசாரம் செய்வதும் எழுதுவதும் ஒரு சமூகத்தார் மீதுள்ள துவேஷத்தால் அல்ல. ஆயினும் சீர்திருத்தம் செய்யப் புறப்படும் தீர்க்கதரிசிகளுக்கு எதிர்ப்பு ஏற்படுவது சகஜம். பிரான்சு தேசத்தில் சீர்திருத்தத்திற்காகத் தோன்றிய ரூசோ என்பவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டதுபோல் தென் இந்தியாவில் திரு. இராமசாமி அவர்களுக்கு எதிர்ப்புதோன்றுவது ஆச்சரியமில்லை. ஆயினும் ரூசோவுக்கு பிரான்சு தேச வாலிபர்கள் எவ்வாறு உதவி செய்தார்களோ, அவ்வாறு தென் இந்திய வாலிபர்களும் திரு. இராமசாமி அவர்களின் இயக்கத்திற்கு உதவிசெய்ய வேண்டுவது கடமையாகும் என்று கூறி முடித்தார்.

"திராவிடன்"

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டுரையை முடிப்பதன் முன் நமது ஆராய்ச்சியைப் படிக்கும் அன்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகின்றோம். நாம் வால்மீகி இராமாயணத்தின் கண்ணுள்ள உண்மைகளைத் தொடர்பாக எடுத்துக்காட்டி அதனால் இராமன் முதலிய ஆரிய மக்களின் நிலைமைகளை விளக்கி வருவதோடு கம்பர் அவ்வரலாற்றை எவ்வாறு மாற்றியோ திரித்தோ புதுவது புனைந்தோ உலகத்தை ஏமாற்றுகிறார் என்ற உண்மைகளை எடுத்தியம்பி வருகின்றோம். இது மெய்யறிவாளர்களுக்கு உண்மைத் தோற்றத்தால் இன்பமும் வியப்பும் தோன்றி அவர்களுள்ளத்தை மகிழ்விக்கும் என்பதில் ஐயம் அணுவளவுமில்லை. ஆனால் அறிஞரேனும் கற்றுவல்லார் போலத் தம்மைக் காட்டிக்கொள்ளும் பண்டிதர் ஒருவரிருவருக்கு இவ்வாராய்ச்சி மன எரிச்சலை உண்டாக்கியிருக்கிறதென்பதிலும் ஐயம் அணுவளவுமில்லை. ஆதலின் அவர்களுள் இரண்டொருவருக்கு மனப் புழுக்கம் அதிகமாகி வெளிவந்து நம்மை தூற்றவும் தலைப்பட்டுளர். ஆனால் அப்பண்டிதர்கள் உண்மையில் அறிவாளிகளேல் அவர்களுக்கொன்று கூற விரும்புகின்றோம். நீங்கள் உண்மையில் வால்மீகி இராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் படித்திருக்கின்றீர்களா? உங்களுக்கு ஆரியர் தமிழர் என்று கூறப்பெறும் வகுப்பினரைப்பற்றிய ஆராய்ச்சி உண்டா? நீங்கள் அவ்விரு வகையில் எவ்வகையினர்? அல்லது இரண்டும் கலந்த புது வகையினரா? இவ்வாராய்ச்சிகளில் நுழைந்தாய்ந்து காய்தலுவத்தலின்றி வால்மீகியையும் கம்பரையும் படித்து உண்மை தெளிந்து பின்னர் குறையுளதேல் கூற முன் வாருங்கள். யாம் எடுத்துக் காட்டுவது உண்மையாகப் புலப்படின் அவ்வுண்மைகளை உலகினர்க்கு எடுத்துக்காட்ட முன்வாருங்கள். ஒன்றும் செய்யாது சரியானபடி நூல்களையும் படியாது உண்மை தெரியவேண்டுமென்ற உணர்ச்சியுமில்லாது கம்பர் புரளியில் மயங்கி வாயில் வந்ததையெல்லாம் கூறி ஐயோ நமது தெய்வங்களாகிய இராமனையும் சீதையையும் அநியாயமாகத் திட்டுகிறார்களே என்று நீலிக்கண்ணீர் வடித்துப் பொது மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்துத்திரிய முன் வராதீர்கள். ஏனெனில் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான். ஆதலின் பொதுமக்களை உங்களால் எத்தனைநாள்தான் ஏமாற்றித்திரியமுடியும்? பொது மக்கள் கல்வியறிவடையத் தொ...க்கும் காலம் வந்துவிட்டபடியால் இனி உங்கள் மாமாயமெல்லாம் அவர்களிடைச் செல்லாது. வால்மீகி இராமாயணமோ ஒருவரிருவரால் மட்டுமன்று பலபோல் மொழி பெயர்த்து வெளிவந்துலாவுகின்றதாயிற்று. அம்மொழி பெயர்ப்புக்களிற் பல அவ்வாரியருள்ளும் திருமாலடியராம் ஐயங்கார்களாலேயே மொழிப்பெயர்த்தனவாயுள. ஆதலின் உங்களுடைய நீலிக்கண்ணீரைக் கண்டு இனி பொது மக்கள் ஏமாறார், ஏமாறார்.

அன்பும் அறிவு மிக்க நண்பர்களே! நீங்கள் உங்களிடை வந்து பொய்ம்மையைப் பரப்பி மெய்ம்மையை மறைக்க முன் வரும் பண்டிதரிடம் ஐயா பண்டிதரே நீர் வெறும் பேச்சுக்களை நிறுத்தி தகுந்த ஆதாரத்தோடு முன்வாரும். வால்மீகி இராமாயணத்தைக்கொண்டு சந்திரசேகரப்பாவலன் கூறுவனவற்றுள் எவ்வெவை பொய்யோ அவைகளை எடுத்துக்காட்டும் அவ்வாறு ஒழுங்கான வழியில் நுழையாமல் ஏன் வெற்றுரையாடித் திரிகின்றீர் என்று வினவுங்கள். அப்படி அறிவாளிகள் முன்வந்தாலே பொய்ம்மைப் பண்டிதர் பொய்ம்மையைப் போல நிலைபெறாது ஓடி ஒழிவர். உண்மையே என்றும் வெல்வது என்றும் அழியாதிருப்பது என்றும் நலம் தருவது ஆதலின் உண்மையை நாடுமாறு உங்களை வேண்டுகின்றோம்.

“யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்
தொன்றும் வாய்மையின் நல்ல பிற”

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்
பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு”

இத்துடன் இராமாயணம் அயோத்தியாகாண்ட ஆராய்ச்சி முற்றுப்பெறுகிறது. இனி ஆரணியகாண்ட ஆராய்ச்சி தொடர்ந்து வெளிவருவதாகும்.

## விராலிப்பட்டியைச் சேர்ந்த எழுபட்டி நாயக்கர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தமிழ்நாட்டில் கிழிந்த பஞ்சாங்கமும் காய்ந்த கோரைப் புல்லையும் ஏந்தி பருத்தி நூலை மார்பில் அணிந்துகொண்டு நாங்கள் உயர்ந்த ஜாதி மற்றவர்கள் தாழ்ந்த ஜாதி என்று இறுமாந்து கிராமங்களில் நீங்கள் (குடியானவர்கள்) பாடுபட்டு எங்களுக்கே (பார்ப்பனர்களுக்கே) கொடுங்கள் என்று ஏய்த்து, சட்டியிலிருக்கும் பால் தீட்டில்லை, சுத்த ஜலம் தீட்டென்று ஏமாற்றி பிழைத்தின்னும் பார்ப்பனப் புரோகித, வேத, புராண, இதிகாச சுலோகங்களின் சூழ்ச்சிகளையும், புரட்டுகளையும் ‘குடி அரசு’ ‘திராவிடன்’ ‘தமிழன்’ ‘குமரன்’ முதலிய பத்திரிகைகள் வெளியிடுவதை தாங்கள் பார்த்திருப்பீர்கள்.

பார்ப்பான் கலியாணம், திதி, கர்மம், பிள்ளைப்பேறு, காது குத்தல் முதலிய சடங்குகளில் என்ன மந்திரம் சொல்லுகிறான்? உங்களுக்குத் தெரிந்த பாஷையில் சொன்னால் அம்மந்திரம் பலிக்காதா? அல்லது தாலி பெண்ணின் கழுத்தில் ஏறாதா? பார்ப்பான் அதற்கென்ன தாகனு? மகம்மதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பார்ப்பானில்லையே? அவர்கள் பிள்ளை குட்டிகளுடன் சுகமாக வாழவில்லையா?

தவிர, கிராமங்களிலோ பார்ப்பான் அதிகாரத்துக்கு வரம்பில்லை. எடுப்பதோ ஊர்ப் பிச்சை இதில் ஆணவமோ அளவு கடந்தது. எவ்வளவு பெரிய மனிதனானாலும் பட்டாதாரனானாலும் பார்ப்பானென்ற மமதையினால் மரியாதையின்றி பெயர் சொல்லி அழைப்பதும் சாமி என்று கும்பிட்டால், பக்ஷவாதம் வந்தது போல் ஒரு கையை மார்பு வரை விரல்களை மடக்கித் தூக்குவதுமாக இருக்கிறார்கள். வாலிபர்களே இதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? மற்றும், கலியாணத்தில் கருமாந்திரம் மந்திரம் சொல்லுகிறானா இல்லையா என்று உங்களுக்குத் தெரியுமா? எல்லாம் புரட்டுஎல்லாம் மோசம் காசுக்கும் காய்க்கும் மந்திரம். இல்லையென்றால் மந்திரமில்லை. புரோகிதன் வீட்டில் விதவைகள் எத்தனை? இவர்கள் மந்திரம் ஏன் அவர்களை சுமங்கலியாக்கவில்லை. கல்லைக் கடவுளாக்கும் மந்திரம், தாங்கள் பெற்ற பிள்ளைகள் அமங்கலிகளாகாமல் நித்தியசுமங்கலிகளாக்கக்கூடாதா? இத்தனை நாள் புரோகிதனுக்குக்கொடுத்து முட்டாள்பட்டம் வாங்கியது போதாதா? திதி, திவசம் முதலிய நாட்களில் ஒரு வருஷ காலமாக பட்டினியாயிருந்த உங்கள் பிதிர்க்கள் வானத்திலிருந்து பார்ப்பனப் புரோகிதன் என்றதபாலாபீசு மூலமாக காய், கறி, தக்ஷணை முதலியவைகளை பார்சல் செய்யச் சொல்லுகிறார்களா? பக்கத்து வீட்டிலும் பந்துக்களில் அநேகரும் பகல் பட்டினியும் இராப்பட்டினியுமாயிருக்கிறார்களே அவர்களுக்கு அன்னமிட்டால் உங்கள் பிதிர்க்களுக்கு ஏற்காதா? வேகாத வெய்யிலில் கால் கடுக்க உடல் வேர்க்க உங்கள் பிள்ளைகள் நீங்கள் இட்ட பணியைப்போய் செய்து வருகிறார்களே அவர்களுக்கு பாதரக்ஷையும் குடையும் கொடுத்தால் உங்கள் பிதிர்க்கள் கோபித்துக்கொள்ளுவார்களா? பந்துக்கள், உங்களுடையவும் உங்கள் பிதிர்க்களுடையவும் இரத்த சம்பந்தமானவர்களல்லவா? அவர்களை விட்டு, உங்களைச் சேராதவனும் நீங்கள் தொட்டாலும், பார்த்தாலும் தீட்டாகின்றவனுமான பஞ்சாகப் பார்ப்பானுக்குக் கொடுப்பது தான் சரி என்று எந்த இரக்கமற்ற கடவுளாவது கட்டளையிடுமா? என்று நீங்களே உங்கள் பகுத்தறிவுகொண்டு பாருங்கள். மூடப் பழக்க வழக்கங்களை ஒழியுங்கள். தன் மதிப்பைக் காக்க கற்ற ஜாதியாரே மேலானவர்களென்றறியுங்கள். ‘குடி அரசு’ ‘திராவிடன்’ முதலிய பத்திரிகைகளைப்படியுங்கள்.

குலாபிமானிகளே பெரியோர்களே தன் மதிப்பை அடைந்து பார்ப்பனத்தரகனையும், புரோகிதனையும் நீக்கி இதர ஜாதிகளைப்போல கல்வி கற்று முன்னேறுங்கள். அதுவே நீங்கள் உங்கள் பின் சந்ததியாருக்கும் தேசத்துக்கும் செய்யும் சேவை. ஆண், பெண் என்னும் இருபாலார்க்கும் கல்வி என்னும் அழியாச் செல்வத்தை அளியுங்கள். ஒற்றுமைப்படுங்கள். பார்ப்பனீயம் வீழ்க! சுயமரியாதை வாழ்க!

குலாபிமானி.

## ரஜகுலோத்தமர்கள் மகாநாடு. மதுரையில் கூட்டம்.

ரஜகுலோத்தமர்கள் (வண்ணார்கள்) கூட்டம் நாளது மாதம் 13தேதிமாலை 4மணிக்கு சங்க கட்டிடத்தில் திரு டி. நாராயணன் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஷை குலத்தில் நான்கு வகுப்பினர்களாகிய ஆந்திரர்கள், மகமதியர்கள், பணிக்கர்கள், தமிழர்கள் ஆகியவர்கள் ஒன்று சேருவதாக ஒப்புக்கொண்டு ஷை சங்கத்தில் அங்கத்தினராகச்சேர்ந்தார்கள்.

பின்னர் கனம் மந்திரி எஸ். முத்தய்யா அவர்கள் மதுரைக்கு விஜயம் செய்யும் காலத்தில் ஒரு வரவேற்பு பத்திரம் படித்துக் கொடுப்பதென்றும், கவர்ன்மெண்டார் ஜில்லா தாலூக்கா போர்டுகளிலும் நகர பரிபாலன சபைகளிலும், சட்டசபைகளிலும் நம்முடைய குலத்தவர்களில் ஒவ்வொருவரை நியமனம் செய்யவேண்டுமென்றும், இக்குல மாணவர்களை பள்ளிக்கூடத்தில் இலவசமாக சேர்க்க வேண்டுமென்றும். கோவில் காப்பி ஹோட்டல் முதலிய இடங்களில் மற்ற இந்துக்கள் எவ்வளவு தூரம் செல்லுகின்றார்களோ அவ்வளவு தூரம் இவர்களும் செல்ல உரிமை உண்டென்றும் அவ்வாறு செய்ய தடுக்கின்றவர்களுக்கு யாதொரு விதமான வேலையும் (வெளுப்பு) செய்கிறதில்லையென்றும், குடியை விட்டுவிடவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

பின்னர் ஷை சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:—மதுரை முனிசிபல் கவுன்ஸிலர் சி. துரைசாமி.

உபதலைவர்:— திரு எம். முத்துசாமி. கே. வெங்கலவன்.

காரியதரிசி:— திரு டாக்டர் சி அழகர்சாமி

காரியதரிசி.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

த்தெரியாத நாஸ்திகர்களாக்கிவிட்டார்களென்று சொன்னால் சைவத்தைக் கெடுக்கவந்திருக்கிறார்கள், இதிகாசங்களை ஒழிக்கவந்திருக்கிறார்கள், திருஞான சம்பந்தரையும் சீதையையும் குற்றம் சொல்லுகிறார்கள், நாஸ்திகம் பரவிவிடும், ஆஸ்திகரே வாருங்கள், வருணாசிரமக்காரர்களே வந்து அரசாட்சி செய்யுங்களென்கிறார்கள். ஆஸ்திகத்தை நாங்கள் சொல்லவில்லை, ஆஸ்திகத்திலுள்ள அனாச்சாரங்களையும் அதன் கொடுமைகளையும் எடுத்துவிடவேண்டுமென்றே சொல்லுகிறோமென்றால் அதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளுவோம், இப்பொழுது தேசியம், காங்கிரஸ் சுயராஜ்ஜியம் வேண்டுமென்கிறார்கள். பொதுக்கிணற்றிலும், போர்டு பள்ளியிலும், ராஜாங்க ரோட்டிலும், தெய்வத்தின் சந்நிதியிலும் எல்லோருக்கும் பாத்தியதை வேண்டாமா? தேசத்திற்கோ, பொருளுக்கோ, பெருமைக்கோ இவைகளில் யாருக்கும் அரைக்காசுக்குக்கூட நஷ்டம் வராத விஷயத்தில் நம் மனம் கொடுமைபோடு கல்லாக்கப்பட்டுக் கருணையில்லாமற் போனால் நமக்கு வரும் சுயராஜ்யத்தில் வெள்ளைக்காரர்களுடைய பொருளுக்கும், லாபத்திற்கும் பெருமைக்கும், சுகபோகங்களுக்கும், நஷ்டத்தைத் தரும் நமது கோரிக்கையை வெள்ளைக்காரர்களும் அவர்கள் பார்லிமெண்டும் அவர்கள் மந்திரிகளும் நமது வைசிராயும் எப்படி ஒத்துக்கொள்ளுவார்கள்? ஆங்கிலேய ஜாதியில் நியாயப்பெயர் பூண்டவர்கள் மனங்கூட நாம் இங்கு செய்யும் கொடுமையால் வருத்தப்படுகிறதே என்று சொன்னால், சர்க்கார் தாசர்கள், நாட்டைக் காட்டிக்கொடுக்க வந்தவர்கள், உத்தியோகவேட்டைக் கட்சிக்காரர்கள் என்கிறார்கள். ஆங்கிலேய சர்க்காரிடம் கீழ்மேல் உத்தியோகம் வகிப்பவர்களெல்லாம் எந்த சர்க்கார் தாசரைச் சேர்ந்தவர்கள்? எப்படி உத்தியோகமடைந்தார்கள்? அப்பன் காங்கிரஸ், மகனுக்கு உத்தியோகம்; அண்ணன் காங்கிரஸ் தம்பிக்கு உத்தியோகம்; பென்ஷன் வாங்கினவர்கள் காங்கிரஸ் அவர்கள் பிள்ளைக்குட்டிகளெல்லாம் வெள்ளைக்காரர்களுக்குச் சுற்று மதிற்சுவர்கள் — வக்கீலாகவிருக்கையில் காங்கிரஸ், உத்தியோகம் சம்பாதித்தவுடன் மாப்பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும் உத்தியோக சிபார்சுக்கு வக்காலத்து, உத்தியோகம் கொடுக்கும் வெள்ளைக்காரனுக்கு விருந்து. பத்திராதிபராகவிருந்தாலும் காங்கிரஸ்காரராகவிருந்தாலும் சுயராஜ்யக் கட்சித்தலைவனாகவிருந்தாலும் மகனுக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுப்பதை மறந்தது யார்? தேசியம் என்று சொல்லுகிறவர்கள் பிள்ளைகளை இங்கிலீஷ் படிப்பிப்பது உத்தியோகத்திற்கல்லாமல் தேசத்திற்கோ ஆனால் காங்கிரஸ் பிரசங்க மேடையில் நாலைந்துபேர் அல்லாமல் ஆறாவது பேரைக் காணோமே.

ஒன்றுபட்ட தன்மையென்ற உணர்ச்சியை நமது வாழ்க்கையில் மறந்துமேக்குள் பிரிவுகளும் பலவீனங்களும் உண்டாகி தன்னயம் பொருந்திய உரிமைகளைக் காப்பதில் அதிக கருத்துச்செலுத்தித் தமது குழந்தைகளுக்கு சமமான தாழ்ந்த வகுப்புகளென்று சொல்லப்பட்டவர்களிடம் காட்டவேண்டிய தன்னயமற்ற கடமைகள் சமயக் கோட்பாட்டின் சட்டத்தால் பாழடைந்த நம் நாட்டிற்கு ஆஸ்திகத்தைவிட ஆஸ்திகத்திலுள்ள அனுவசியங்களை அகற்றவேண்டியதே முதலிற்செய்ய வேண்டிய காரியங்கள் என்று சொன்னால், மேற்சொன்ன காங்கிரஸ் மேடைக்கு ஏற்படுத்தின நாலைந்து காரியஸ்தர்கள் மேடையேறின உடன் ஒருதரம் சொன்னவர்களை திட்டிவிட்டு சுயராஜ்ஜியம் கேட்டு விடுவார்கள். தீண்டப்படாதவன் ஒருவன் வந்து நமது திண்ணையில் உட்கார்ந்தால் நமது வீடு, வாசல், பெண்ஜாதி, பிள்ளை, வம்சம், பிதிர்க்கள், தெய்வங்கள் எல்லாம் நாசமாய் நரகத்திற்கு போய்விடுமென்று நினைக்கும் நம்மெண்ணம், இந்தியாதேசம் இந்துக்களுக்குப்போய் இந்திய ஸ்தானாதிபதி இங்கிலீஷ் திண்ணையில் உட்கார்ந்தால் வெள்ளைக்காரர்களின் வியாபாரம் செல்வக்கு, அதிகாரம், பெருமை, இடம், பொருள், ஏவல் எல்லாம்போய் விடுமே என்று வெள்ளைக்காரர்கள் நினைக்கும் எண்ணத்தை எந்த விதத்தில் ஜெயிக்கும்? சனசமூகங்களே சொல்லுங்கள்.

# மதிப்புரை.

## யூகிமுனி வாதாங்க தீக்ஷை 300, யூகிமுனி வாதவைத்திய விளக்கம் 200, யூகிமுனி மதி வெண்பா 100.

இம்மூன்று சித்தர் நூல்களும் இதுகாறும் வெளியாகாதவை என்று தெரிகின்றது. இவை பெரும்பாலும் வாத முறைகளைக் கூறுவனவாயினும், இடையிடையே வைத்திய முறைகளையும் கூறுகின்றன. வாதங்கண்டவன் வைத்தியனுமாவானாகையால், இந்நூற்கள் வாதிகளுக்கும் வைத்தியர்களுக்கும் மிகுதியும்பயன்றருவனவாம். இம்மூன்று நூல்களும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

விலை ரூபாய் 1—0—0.

## யூகிமுனி கரிசலை 36 தேரையர் கரிசலை 300, அகத்திய கல்நண்டு சூத்திரம் 16.

இம்மூன்று சித்தர் நூல்களும் வைத்திய நூல்களாயினும்இடையிடையே வாதவகைகளையுங்கூறுகின்றன. கரிசலைகளெல்லாம் வைத்தியர்களுக்குச் சிறந்த முறைகளைக் கூறுவனவாம். கல்நண்டு சூத்திரம் இதுவரை அச்சுவாகனமேறாத நூலாகும். பலமுறைகளில் பல அநுபானங்களில் எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கும் விதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இம்மூன்று நூல்களும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் ஒரே கட்டடமாக உள்ளன. விலை அணா 12.

## சிவஞான போத மூலமும் தெளிபொருள் விளக்கவுரையும்.

சிவஞானபோதம் இறைவனருளிய "ரௌரவ" ஆகமத்தில் ஒரு கோடியில் 12 சுலோக ரூபமாயுள்ளது. மெய்கண்ட தேவர் தமிழில் மேற்படி சுலோகங்களை 12 சூத்திர வடிவமாக மொழிபெயர்த்து அவற்றின் பொருளைச் சுருக்கமாகவும் வசனமாகவும் செய்யுள்களாகவும் வரைந்திருக்கின்றனர். பேதமாகவும் அபேதமாகவும் இயற்றப்பட்டுள்ள மெய்கண்டாருரை, மெய்யுணரும் வேட்கையுடையார்க்கு ஐயந்தருவதாமெனக் கருதி அத்வைத தருக்க போதகாசாரியர் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் சிவஞான போதத்திற்கு அபேத பரமான ஒரு தெளிபொருள் விளக்க உரையியற்றி இருக்கிறார்கள். இவ்வுரை சிலர்க்குப் புதுமையாகக் காணப்படினும், சிவஞான போத நூலை அபேத பரமாகக் கொள்வோர்க்குச் சிறப்பாகவே விளங்குவதாவதோடல்லாது இவ்விளக்கவுரை விருந்து போல்வதாகும். சிவஞான போதம் சிறிய நூலாயினும் இதன் உரை டிம்மி 16 பக்க அளவில் 256 பக்கங்கள் கொண்ட பெரிய நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது. உயர்ந்த கிளேசு காகிதம்.

விலை ரூபாய் 1—0—0.

சென்னை கோமளேசுவரன்பேட்டை அம்பா விலாச புத்தகசாலையில் மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும்.

## மாயவரத்தில் சுயமரியாதைத் திருமணம்.

மாயவரத்தில் 7-4-29 ஞாயிறன்று தூக்கணாங்குளத்தெருவில் பழ வியாபாரம் திரு. சிங்காரத்திற்கும் நாகை மஞ்சக்கொல்லை திரு. பொன்னுசாமிபிள்ளை அவர்களின் திருச்செல்வி தனபாக்கியத்திற்கும் திருமணம் சுயமரியாதை முறைப்படி மாங்கல்லியம் தரிப்பது தவிர வேறெவ்வித சடங்குகளுமின்றி நடைபெற்றது.

மணம் முடிந்தவுடன் திருவாளர்கள் சின்னையாவும் ராமையாவும் மணங்கள் சுயமரியாதை முறையில் நடக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். அநேக கனவான்கள் விஜயஞ்செய்திருந்தனர். மணம் முடிந்தவுடன் ஜாதிமதபேதமின்றி சுமார் 100 பேர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

நன்கொடை.

இம்மணத்தின் ஞாபகார்த்தமாக 'குடி அரசு' க்கு ரூபா ஒன்று நன்கொடையாக அனுப்பிவைக்கப்பட்டது. ஒரு நிருபர்.


நன்கொடை யனுப்பிய நண்பர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம். (ப-ர)

சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு.


கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA.

ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும், சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி, மதராஸ்,

வேதப்புரட்டை வெளியாக்கும்
"ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு
வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனும். ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும். V. P. மூலம் அனுப்பினால் 14 அணா ஆகிறது.

திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் விலை அணா 0—4—0

சுயமரியாதைப்பாடல்கள் விலை அணா 0—2—0

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.





ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால்,

பழனி சி. எம். சாமி மகா வீரிய

# தங்க பஸ்பம்

சாப்பிடுங்கள். தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள், தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

1. தங்கள் மகாவீரிய தங்கபஸ்பத்தைப்பற்றி எனக்குத்தெரிந்தமட்டில் இதற்கு நிகரான மருந்து கிடையாது என்பதை மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறேன். தாங்கள் நீடூழியாய் இருக்க வேண்டியது. ரொம்ப ஜனங்கள் தங்கள் மருந்தினால் பிழைத்து ஜீவிப்பார்கள்.

10—1—29. ஸ்ரீமான். துரைப்பாண்டிய வீரணனம்பலம், இராமநாதபுரம்.

குரு அப்ரேக் செந்தூரம்—நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1 க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1 க்கு ரூ. 30.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்தியாசிரியர்


C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி. S. I.

(12-b)



ரூ. 2—14—0 ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 2—14—0.

கனடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

(4-d)



மதனகாமேஸ்வர லேகியம்.

அரித சொற்பன வெளியீடுகளை நிவர்த்தித்து நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி குறைந்துபோன இந்திரியத்தை விருத்தியாக்கி தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றிஜனனேந்திரியக்கருவிகளைப்பலப்படுத்துவதில் நிகரற்றது. சேர் 1 க்கு விலை ரூபாய் 3. வி. பி. வேறு.

பஞ்ச தீபாக்கினி லேகியம்.

அஜீரணம், அக்னி மந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப்பொருமல், குன்மம், வாயு முதலிய இரப்பை சம்பந்தமான சகலரோகங்களையும் நிவர்த்திக்கும் சேர் 1 க்கு விலை ரூபா 1-8-0 வி. பி. வேறு. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

சித்த வைத்தியசாலை,
ஆநந்த நிலயம், திருச்செங்கோடு. S. I.



ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மை கருதிப் பிரசுரிப்பது; 46-பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் வர்ண மிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் படிப்போர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட
உள்நாடு களுக்கு ரூ. 1—0—0
வெளிநாடு களுக்கு ரூ. 1—4—0

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

(4-g)


எவ்வுயிர்க்கும் அன்பாயிரு!

## "பாரதி"

இஃது

தேசாபிமானம் பாஷாபிமானம் அரசியல் ஜன நிர்மாணம் ஆசார சீர்திருத்தம் சமூகத் தொண்டு விவசாயம் கைத்தொழில் வியாபாரம் பொருளாதாரம் ஜீவியசரித்திரம் தேசசரித்திரம் கிராம நிர்மாணம் தீண்டாமை விலக்கு மதுவிலக்கு மாதர் விடுதலை கதர் இயக்கம் வாலிபர் இயக்கம் மாதர் இயக்கம் சாரணர் இயக்கம் புஸ்தகாலய இயக்கம் ஐக்கிய இயக்கம் தொழிலாளர் இயக்கம் சன்மார்க்க இயக்கம் அயல்நாடுகளில் நம்மவர் பொதுஜனக்கல்வி கலைவளர்ச்சி குழந்தைவளர்ப்பு தேசப்பிரசித்தி சுகாதாரம் பத்திரிகைத்தொழில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு ஆகிய விஷயங்களுடன் வெளிவரப்போகும் ஓர் உயர்தர தமிழ்மாதப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! இத்தகைச் சிறப்புடன் உதயமாகும் "பாரதி"யை அதிகமாயும் அன்புடனும் ஆதரிக்க வேண்டியது தமிழ்ச்சகோதர சகோதரிகளின் தனிக்கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விரும்பினால், "பாரதி"யில் விளம்பரம் செய்யுங்கள்.

இதன் ஆசிரியர், தேவாரம் ரா. நாராயணசாமி

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0.
வெளிநாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-8-0.
அல்லது 4 ஷிலிங்

விலாசம்:—மானேஜர்,
"பாரதி" உத்தம பாளையம்,
மதுரை ஜில்லா.

(8)

---

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்திலுள் மூறையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் சளி, இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காரமப்பு எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி திடனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும் படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8—0 அனுப்பவேண்டும்.

புரொப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(18) அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

---

## திருப்பூர் கதர் & பனியன்ஸ்.

உங்களுக்கு எதுவேண்டும்!
கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!
எதுவேண்டுமானாலும்

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரியில்

தயார் செய்யப்படுகிறது.

விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு | 5—8—0. | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு | 6—8—0. |
| ,, அரை டஜன் | 2—14—0. | ,, 2 டஜன்கள் | 12—0—0. |
| ,, கால் டஜன் | 1—2—0. | ,, 3 டஜன்கள் | 17—8—0. |

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும். வெளிநாடு ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபரஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

கதர், கருப்பண்ணன்,
**Khaddar. Karuppanan,**
(7) Sole Agent, TIRUPUR. (S. India)

---

## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?


தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3811.
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 8-15-0. உத்திரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீலேனி வாட்ச் கம்பெனி,
(4-f) மின்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

## குறைந்த அவகாசத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916-ல் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் செய்யவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்ததும் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
(16) வாலாஜாப்பூர், மதுரை.

---

## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் ஆசாரங்களையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

**இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.**
**வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.**
**இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.**
**விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"**
(f) **152, ஸிஸில்ரோட், சிங்கப்பூர்.**


**ஈ.வெ.: ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.**